கனடாவில் இருந்து வெளிவரும் பொழுதுபோக்கு சஞ்சிகை













# சினித்திரன் கனடா

B4 075

## தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

## லக்ஷியா



# cinetron canada

Volume 2
JAN-FEB-MAR
2006

Canadian Tamil Movie Entertainment Magazine







# Cultural Identity



## Art, drama, music, dress, design, worship, hobbies etc.

**Produced by:**
**Khavina, Praveena, Priyanka, Suhana and Meera**

**To be released soon...**

# VARIETY ALBUM

# சினித்திரன்
கனடா

**ஆசிரியர்**
நிர்வாகம்
வரைகலை, எழுத்துரு, அமைப்பு
கிருஷ்ணா சிவப்பிரகாசம்
416 - 299 0484

Designed & Created by
Krishna Sivapragasam
EDITOR



**இந்த இதழ்
முகப்பு அட்டையில்
லக்ஷியா**




## ஆசிரியர் சிந்தனை:

### கனேடிய தமிழ்த் திரைப்படத்துறை உருவாக்கம்

# இது கலைஞர்களுக்கு பொற்காலம்

கனடாவில் திரைப்படத்துறை உருவாகிவிட்டது. அதற்கான தடயங்கள் தென்பட்டுவிட்டன. கலைஞர்கள் உற்சாகமாக உள்ளனர். இது எப்படிச் சாத்தியமானது என்று பலரும் அதிசயப்பட்டிருக்க, கனடாத் தமிழருக்கான திரைப்படத்துறையின் உதயத்தினையிட்டு சினித்திரன் அகமகிழ்கிறான். எப்போது இது நடக்கும் எனக்காத்திருந்த ஒன்று, இந்தவேளையில், அதுவும் சினித்திரன் வெளிவர ஆரம்பித்த இவ்வேளையில் தோன்றி யிருக்கிறது என்றால்... அது எமக்குப் பெருமகிழ்ச்சியே.

திரைப்படத்துறை என்பது தொடக்கூடிய, பார்க்கக்கூடிய ஒரு பொருள் அல்ல. உணரக்கூடிய, அதன் பயன்களால் நன்மையடைந்து கொள்ளக்கூடிய ஒரு தோற்றுகையே திரைப்படத் துறை. அதன் உருவாக்கத்துக்கு பல காரணிகள் பின்னணியில் இருக்கும். அந்தப் பின்னணிகள் ஒவ்வொன்றும் உருவாகி, எவரும் எதிர்பாராத வேளையில் கனடாத் தமிழ் திரைப்படத்துறையின் வெளிப்பாடு உணரப்பட்டிருக்கிறது.

பல படங்கள் தொடர்ந்து வெளிவர ஆரம்பித்துவிட்டன. பல படங்களுக்கான பூஜை போடப்பட்டுவிட்டது. திரைப்படத்துறை ஆங்காங்கு தொழில் முயற்சிகளையும் முடுக்கிவிட்டிருக்கிறது. சாதாரண மக்களும் (அதாவது, கனடா தமிழ் ஊடகங்கள்(?) நீங்கலாக மற்ற அனைத்தும்) கனடாத் திரைப்படத்துறை பற்றி பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் தோற்றம் பற்றி பலரும் நம்ப மறுக்கின்றனர். ஆனால் அதையும் மீறி கனடாத் திரைப்படத்துறை மேலும் பெருவளர்ச்சியினை அடுத்துவரும் மாதங்களில் விளைவிக்க விருக்கிறது. கனடாத் திரைப்படங்களை நம்பி அதை மட்டும் தளமாக கொண்டு சினிமா சஞ்சிகைகள் வெளிவருகிறதென்றால் அதுவும் கனடாத் திரைப்படத்துறை உருவாக்கத்தின் வெளிப்பாடே.

கனடாத்தமிழர், மொழி, இனம் என்பதனையும் கடந்து வேற்று இனங்களுக்குள்ளும் தமது கலைப்படைப்புக்களுடன் செல்லக்கூடிய வழி ஏற்பட்டுவிட்டது. இதன் தொடர்ச்சியாக கலை முயற்சிகளும், அதனோடு சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப தொழிற்துறைகளும் அதிகரிக்கப்போகின்றன. Entertinment industryயில் நாம் புதுச்சரித் திரம் படைக்கப்போகிறோம். இதற்கெல்லாம் காரணமாய் இருந்த அனைத்துக் கலைஞர்களுக்கும் நன்றிகள்.

இனி நம் அடுத்த செயற்பாடு என்ன.. ஒவ்வொரு அடிகளையும் வெகு அவதானமாக எடுத்துவைக்கவேண்டும். இந்தத்துறை விருட்ச மாகுவற்கு எதுவெல்லாம் உறுதுணை புரியுமோ அதையெல்லாம் பயன்படுத்தல் வேண்டும். எதுவெல்லாம் தடையாக தலைநீட்டுமோ அதையெல்லாம் அறுத்தெறியவேண்டும். வேற்றுக் கலாச்சாரத் தினருடனும் நாம் தொடர்புகள், கைகோர்த்தல்களைச் செய்ய வேண்டும்.

இது கலைஞர்களுக்குப் பொற்காலம்.

அன்புடன்
கிருஷ்ணா சிவப்பிரகாசம்

# மூன்று கமராமென் கூட்டு முயற்சியில்
# 'புதுமைப் பெண்'
## தென்னிந்தியாவில் ஜனவரி மாதம் படிப்பிடிப்பு
## சித்து + தரன் + ரவி அச்சுதன்





ஆங்காங்கு சில திரைப்படங்களில் நடித்துக்கொண்டிருந்த தரனுக்கு தயாரிப்பு ஆசை வந்துவிட்டது. தானே கதாநாயக னாகவும் தயாரிப்பாளராகவும் ஆகிவிட் டார். திரையுலக நண்பர்களான சித்துவை யும் ரவி அச்சுதனையும் அழைத்துக் கொண்டு தென்னிந்தியா புறப்படுகிறார். ஜனவரியில் கேரளாவில் படிப்பிடிப்பு செய்ய ஏற்பாடுகள் நடக்கிறது. "யாருங்க கதாநாயகி?" என்று கேட்டேன். "அப்புறம் பாருங்க" என்று சொல்லிவிட்டார்கள். சித்து டைரக்ட் செய்ய, ரவி அச்சுதன் கமராவாம். இருவரும் நல்லதொரு சேர்க்கை என்றே திரையுலகத்தில் பேசிக்கொள்கிறார்கள். கனடாவில் தமிழர் திரைப்படத்துறை தொடங்கிய இவ்வேளையில் இப்படி யெல்லாம் புரட்சி நடப்பது ஆனந்தமாக இருக்கிறது.

ரவி அச்சுதனிடம் படக்கதையின் சாராம் சத்தை கேட்டேன். மணியான கதைதான். மலையாள தேசத்தில் சித்துவும் ரவியும் வெளுத்துவாங்கப் போகிறார்கள். இவர்கள் தமிழ்நாட்டுக்கு போகாமல் ஏன் கேரளா போகிறர்கள் என்று எவரும் சந்தேகப்பட வில்லை. மலிவான கதாநாயகி என்கிறார் கள் சிலர்.. அழகான கதாநாயகி என்கின்றனர் வேறு சிலர். இலங்கையோடு பொருத்தமான இயற்கைக் காட்சிகள் என் கின்றனர் சிலர். என்னவோ.. "புதுமைப் பெண்" கொஞ்சம் கிளுகிளுப்பாக இருப் பாளோ! கோடையில் படம் ரிலீஸ் ஆகுமாம்!

## மாறுவேஷத்தில் இருக்கும் இந்த கனேடிய தமிழ் நடிகர்கள் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!

பதில் பக்கம் 27 ல்



## டாக்டர் கதிர் துரைசிங்கம் திரைப்படத்துறைக்கு செய்த பெரும் பணி



தனது சொந்த அலுவல்களுக்காக இலங்கை, இந்தியா, ஐரோப்பா சென்ற இவர், அந்த நாடுகளில் கனடாத் திரைப்படங்கள் பற்றிய அறிமுகத்தினை அங்குள்ள தொலைக்காட்சிகளில் செய்து, "சுகம் சுகமே" திரைப்படத்தினை அங்கு திரையிட்டும் உள்ளார். பல நாடுகளிலும் கனடாத் தமிழ் திரைப்படங்கள் பற்றி இப்போது கதைக்கிறார்கள் என்றால் ....அதற்காக இவருக்கு கனடாத் தமிழ் திரைப்படத்துறை நன்றிகூற கடமைப்பட்டுள்ளது.

## கனடாத் தமிழ் திரைப்படங்களுக்கு அதிஷ்டம் வருகிறது



கே.எஸ்.பாலச்சந்திரனின்

### எங்கோ தொலைவில்

TVI தொலைக்காட்சியில் பி.விக்னேஸ்வரன் அவர்களின் அறிமுக உரையுடன் ஒளிபரப் பப்பட்ட முதல் கனடா தமிழ்ப்படம்.

.........................................................

நமக்குக் கிடைத்த செய்திகளின்படி, கனடாத் தமிழ்ப் படங்கள் அனைத்துக்கும் வெகுவிரைவில் அதிஸ்டம் கிடைக்கவிருக் கிறது. அவை தமிழ் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படவுள்ளன. அது மட்டுமின்றி தமிழ் நடிகர்களுக்கு பலவித ஊக்குவிப்புக் களும் கிடைக்கவிருக்கிறது. இந்த மாற்றத்துக்கு காரணம் கனடாத் தமிழ்த் திரைப்படத்துறை உருவாகியமை என்றும் கூறப்படுகின்றது. இது பற்றி தமிழ்தொலைக் காட்சிகளை அழைத்து ஊர்ஜிதம் செய்க.

# கலைத்துறையில்

## ஒரு இடத்தைப் பிடித்துவிடுவேன்...

## நம்பிக்கையுடன் செல்வி லக்ஷியா

(அட்டைப் படத்தில் இருப்பவர்)



எனக்குப் பிடித்த நடிகர் தமிழிச்சி சுதன்



மென்மையான வைரங்கள் திரைக்கு வந்தபோது, குழந்தை நட்சத்திரமாக பலரது கவனத்தையும் ஈர்த்தவர் லக்ஷியா. அவரது நடிப்பினைப் பார்த்த அனைவரும், எதிர்காலத்தில் நல்லதொரு நடிப்பாற்றல் மிக்கவராய் இவர் வருவார் என்று கூறிக்கொண்டனர். எனினும் இவருக்கு அவ்வா றான வாய்ப்புக்கள் அமையவில்லை. பாடசாலை யில் படித்துக்கொண்டிருப்பதால் நேரம் போதிய ளவு கிடைக்கவில்லை.

"எனது சிறுவயதில் இருந்து நடிப்புத்துறையில் எனக்கிருக்கும் ஆர்வமோ திறமையோ கொஞ் சமும் குறையவில்லை. பல்வேறு வகைகளிலே நடிப்புத்திறனுக்குரிய விடயங்களை எனக்குள் வளர்த்துவருகிறேன். அம்மா (யசோதா) தொடர்ந்தும் நடித்து வருவதால், திரைப்படங் களுடன் எப்போதும் எனக்கு ஒரு தொடர்பு இருந்து வருகிறது. எனக்கென்றொரு சமயம் வருகின்றபோது, அந்தக் கதாபாத்திரத்துக்கு உயிர்கொடுத்து நல்ல நடிகை என்ற பெயர் பெறுவேன்"

என்று மிகுந்த நம்பிக்கையுடன் கூறினார் செல்வி லக்ஷியா. கே.எஸ்.பாலச்சந்திரன் போன்ற புகழ்பூத்த இயக்குனரின் படத்தில் தான் முதலாவதாக நடித்தமையை ஒரு பேறாகக் கருதுகிறார் இவர். பேச்சாற்றலும் நடிப்பாற்றலும் கொண்ட இவர் திரைப்படங்கள் பார்ப்பது, பாடல்கள் கேட்பது, போன்றவற்றில் தனது ஓய்வு நேரங்களைக் கழிப்பார். தங்கை சிறுமி அருண்ஷியாவுடன் விளையாடுவதில் அலாதிப் பிரியம் இவருக்கு. தமிழிச்சி படத்தில் வரும் சுதனின் நடிப்பு தனக்கு நன்றாக பிடித்திருக்கிறது என்று கூறும் இவர் விஜே, ஜோதிகாவின் படங்களை விரும்பிப் பார்ப்பேன் என்கிறார். பஞ்சாபி (சுடிதார்) ஆடைகளை அணிவதிலே மிக விரும்பம் என்று சொல்லும் இவருக்கு ஹரிகரனின் பாட்டுகள் எள்றால் உயிர்.

திறமையும் ஊக்கமும் உள்ள செல்வி லக்ஷியாவுக்கு நல்ல எதிர்காலம் அமைய வாழ்த்துகிறோம்.


## கே.பி.நாத் வழங்கும் சினி அரங்கம்

கே.பி.நாத் அவர்களும் ரொலிவூட் கனடா நிறுவனமும் இணைந்து சினிஅரங்கம் என்னும் நிகழ்ச்சியினை நடத்தவிருக்கிறது.

இடம் : Hotel Delta

(Kennedy &401)

காலம்: 28-1-2006 சனிக்கிழமை

மாலை 6 மணி

சினிமா பற்றிய கருத்தரங்கும் கலந்துரையாடலும் இடம்பெறும். றெட் வின்டர் திரைப்பட DVD யும் வெளியிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

கே.பி.நாத் 416-320-6284.






மென்மையான வைரங்கள் படத்தில் குழந்தை நட்சத்திரமாக லக்ஷியா

லக்ஷியாவுக்கு பிடித்த தென்னிந்திய நடிகர்





# கே.எஸ்.பாலச்சந்திரனின் "காதல் வானிலே"

## நகைச்சுவைப் பட்டாசுக்களை சுமந்தபடி காத்திருக்கிறது



பாலா அண்ணையின் நகைச்சுவை ஒவ்வொன்றிலும் ஏதோ அர்த்தமும் பொதிந்திருக்கும்
- சினிமா உலக பிரமுகர் ஸ்ரீமுருகன்

"அண்ணை எப்பவும் ரைட் என்பதில் எந்த மாற்றமும் இல்லை"
- அருண்



ஒளிப்பதிவாளர் பவன்



இயக்குனர் கே.எஸ்.பாலா

கனடாவில் இப்போது பலரும் நகைச்சுவைப்படங்களையே தயாரிக்க விரும்புகிறார்கள்.

"திரைக்கதை வசனம் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த தேவையில்லை என்பதால் இப்படி நகைச்சுவைக்குள் இறங்கிவிட்டார்கள்"

என்று சொல்லி புன்னகைத்தார் திரைப்பட இயக்குனர் ஒருவர். ஆனால் பாலா அண்ணை (கே.எஸ்.பாலச் சந்திரன்) இந்த திரைப்படத்தை ஆரம்பித்து சில ஆண்டுகள் ஆகிவிட்டன. தயாரிப்பில் ஏற்பட்ட சில தடங்கல்களால் படம் வெளிவருவது தாமதமாகிவிட்டது. இப்போது படத்தின் அநேக பகுதிகள் முடிந்துவிட்டன. 2006ம் ஆண்டு எப்படியும் இந்தப் படத்தை வெளிக்கொணரவேண்டும் என்ற முனைப்பு காணப்படுகின்றது.

பணக்கார மாமனாரைத் தேடி ஒரு நகைச்சுவைப் பயணம், குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் சம்பவங்களால் அனைவரையும் மகிழ வைக்கிறது. ரமேஷ் புரட்சிதாசன், குரும்பசிட்டி ஆர். ராஜரத்தினம், எஸ்.ரி.செந்தில்நாதன், சத்தியவரதன், கமல்பாரதி, கஜேந்தினி, யசோதா, விஜே குலதுங்கம், வில்வமோகன் போன்று பலர் இத் திரைப்படத்தில் நடிக்கின்றனர். படத்தின் காட்சிகள் பல விஜே குலதுங்கம் அவர்களின் வீட்டில் இயற்கையாக எடுக்கப்பட்டிருக்கிறது.

திரைக்கதை வசனம் டைரக்சன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றிருக்கிறார் கே.எஸ்.பாலச்சந்திரன். கமராவினை கையாள்பவர் பவன். வாகீசனின் இசையமைப்பில் இந்தப் படத்தினை தயாரிப்பவர்கள் எஸ்வி.புரடக்சன். 2006ம் ஆண்டு கனடா தமிழ் திரைப்பட ரசிகர்களுக்கு ஒரே நகைச்சுவைக் கொண்டாட்டம்தான்.

# நாச்சியார் கபே

## சின்னத்திரைக்காக சுரேஷ்ராஜா + கரு கந்தையா தயாரிக்கும் நகைச்சுவைத் தொடர்



சின்னத்திரைக்காக புதியதோர் நகைச்சுவை தொடர் ஒன்றினை சுரேஷ்ராஜாவும் கரு கந்தையாவும் தயாரித்து வருகின்றார். இந்த நகைச்சுவைத் தொடரின் பிரதியாக்கம் 'மெதுவாக உன்னைத் தொட்டு' புகழ் அருண். இந்த நகைச்சுவைத் தொடரில் முக்கிய கதாபாத்திரங்களாக சுரேஷ்ராஜாவுடன் நடிப்பவர் கரு கந்தையா. ஆரம்பத்தில் தனி நிகழ்ச்சியாக அமையும் இந்த நகைச்சுவைப்பகுதியை தொடர்ச்சியான நிகழ்ச்சியாக அமைக்கலாம் என தயாரிப்பாளர் குறிப்பிட்டார். கனடாவில் இவ்வாறான சின்னத்திரை நகைச்சுவை கதை உருவாக்கப்படுவது இதுவே முதல்தடவை. பிரதிகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, சின்னத்திரை ஆக்கத்துக்கு உரிய வகையில் செய்யப்பட்டுவிட்டது என அறியப்படுகின்றது. கரு கந்தையா முதலாளியாகவும் சுரேஷ்ராஜா தொழிலாளியாகவும் நடிக்கின்றனர்.






# கனடா தமிழ் திரையுலக 'சொப்ன சௌந்தரி' மாயா



## சத்தியமாக நான் மலையாளி இல்லே!

- குரு அரவிந்தன்

அசப்பிலை பார்த்தால், அசல் மலையாளி தான் என்று சொல்லக்கூடிய முகச்சாயல். அது மட்டுமல்ல... பெயர்வேறு அப்படி அமைந்து விட்டது... குரு அரவிந்தன். கனடாத் தமிழர் மத்தியில் கைவிட்டு எண்ணக்கூடிய கதை ஆசிரியர்களில் இவர் ஒருவர். பத்தரிகையில் பிரபலமாகி, தென்னிந்திய சஞ்சிகைகளில் பிரபலமாகி, இப்போது சினிமாவிலும் காலடி எடுத்து வைத்திருக்கிறார். தென்னிந்திய சஞ்சிகையில் தொடந்து எழுதி ஈழத்து தமிழ் எழுத்துத்துறைக்கு பெருமை சேர்த்த இவர், அண்மையில் எழுதிய கதை ஒன்றின் மூலம் நூற்றுக்கணக்கான காதலிகளைப் பெற்றுள்ளார். வாசகர்களின் கட்டுக்கட்டான கடிதங்களை பிரித்துப் படிக்கவே நேரம் இல்லாது தவிக்கிறார்.

இவர் கதைவசனம் எழுதிய "சுகம் சுகமே" திரைப்படம் சில மாதங்களுக்கு முன்னர் திரையிடப்பட்டு பலரின் பாராட்டினையும் பெற்றது. இவரின் கதைவசனத்தில் உருவான "வேலி" இன்னும் சில வாரங்களில் திரைக்கு வரவிருக்கிறது.

எல்லோருடனும் மிகவும் பௌவியமாகப் பேசுபவர் இவர். ஆடம்பரங்களை விரும்பாமல் அமைதியாகவே இருப்பவர். இவரின் திறமைகள் இப்போது, தமிழர்கள் வாழும் பல இடங்களுக்கும் பரவியிருக்கிறது.

### ரமேஷ் கணேசனின்

# என்னுள்

## புதிய கனடா தமிழ் திரைப்படம்

மற்றுமோர் தமிழ்த் திரைப்படம் கனடாவில் உருவாகுகிறது. 20-11-2005 அன்று கனடா திருச்செந்தூர் ஆலயத்தில் இந்தப் படத்துக்கான பூஜை போடப்பட்டது. ரமேஷ் கணேசன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி, கமரா பொறுப்பினையும் ஏற்று படத்தினை இயக்குகின்றார். படப்பூஜையில் கனடா திரைப்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். இந்தப் படத்துக்கு "என்னுள்" என்று பெயரிட்டுள்ளனர். இந்த திரைப்படத்தின் எடிட்டிங், மற்றும் தயாரிப்பு நிர்வாகங்களை ஶ்ரீமுருகன் (அருள்) குமாரசாமி பொறுப்பேற்றிருக்கிறார். இத்திரைப்படத்தினை செட்னா புறடக்சன்ஸ் நிறுவனம் தயாரிக்கின்றது. இயக்குனர் கே.எஸ்.பாலச்சந்திரன் கிளாப் அடித்து படிப்பிடிப்பினை ஆரம்பித்துவைத்தார்.



"என்னுள்" படபூஜை நடந்தபோது ....



15-1-2006
கலைஞர்
இளையபாரதிக்கு
50வது
பிறந்த நாள்
வாழ்த்து

# இளையபாரதி வானொலிக்காக எழுதிய கதை திரைப்படமாக வெளிவருவதில் என்ன தாமதம்

சிரிபிசி வானொலியின் அபிமான நேயர் ஒருவர் கனடாவில் திரைப்படம் எடுப்பதில் மிக ஆர்வமாக இருக்கிறார். இந்த முதிய நேயர் இளையபாரதியை மிக நேசிப்பவர். சிரிபிசி வானொலியில் ஒலிபரப்பாகி பலரின் பாராட்டுக் களையும் பெற்ற கதை ஒன்றினை திரைப் படமாக்க உரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார் இந்தக் கதையை வானொலி நாடகமாக எழுதியவர் இளையபாரதி என்று அறியப்படுகின்றது. படத் தயாரிப்பில் மிக அக்கறையுடன் கவனம் செலுத்திய இந்த முதிய நேயர், நடிக நடிகையரைக்கூட தேர்வு செய்துவிட்டாராம். இளையபாரதியையும் அதில் ஒரு பாத்திரத்தில் நடிக்க வைக்கவேண்டும் என்று அந்த நேயருக்கு மிக விருப்பம். இந்தப்படம் எடுத்து முடிக்க ஏராளமான பணத்தை செலவு செய்யப்போவதை அறிந்த இந்தத் தயாரிப்பாளரின் பிள்ளைகள் காட்டிய எதிர்ப்பினால், தயாரிப்பில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

எனினும், இந்த தயாரிப்பாளர் மனம் தளரவில்லை.

"இவர்கள் யார் என்னைத் தடுப்பது. நான் எப்படியும் இந்தப் படத்தை எடுப்பேன்"

என்று திடமாகச் சொல்கிறார் இந்த முதியவர். இந்தப் படம் பற்றி இவர் செய்து வைத்திருக்கும் ஏற்பாடுகள் பிரமிக்க வைத்தன. காட்சிகளுக்கு உரிய இடங்கள், உடுப்புகள், நடிகர்கள் முதல் சகல விடயங்களையும் எழுதிவைத்திருக்கிறார். இந்த முதியவர் யார் என்பது பற்றி சினித்திரன் ஆராய்ச்சியில் இறங்கியது. இலங்கையிலே தன் இளமைக்காலத்தில் திரைப்படப் பைத்தி யமாக இருந்தவர் இவர். ஒருசில படங்களிலும் தலைகாட்டியிருக்கிறார். தனக்கு கிடைத்த முதியோர் ஓய்வுப் பணத்தை சேமித்து வைத்திருக்கும் இவர் திரைப்படம் எடுப்பது தனது வாழ்க்கையில் இலட்சியம் என்கிறார்.

"கனடாவில் திரைப்படம் எடுப்பவங்கள் எல்லாம் ................ நான் எடுத்துக் காட்டுறன் பாருங்கள்"

என்று வீராவேசமாக சொல்கிறார் இந்த முதியவர். பொறுத்திருந்து பார்ப்போம்!



## நீதன்

புதுஉறவு, கலகலப்பு போன்ற படங்களிலும் நாடகங்களிலும் நடித்த இவர் கனடாத் திரைப்பட உலகில் அனைவருக்கும் பிடித்த நடிகர்



சிண்டு முடியும் திரையுலகம்

## ஆற்றில் போட்டது ஐந்து! குளத்தில் கிடைத்தது ஆயிரம்!

கனடா திரையுலகத்தில் திரைப்பட கலைஞர் கள் பலர் இப்போதும் சின்னப் பெடியள் போல...

யாராவது எதையாவது சொன்னால் ஒன்றை மூன்றாக்கி, மூன்றை முப்பதாக்கி, கடைசியில் செய்தி திரிக்கப்பட்டு, முழுமையாக பொய் பரப்பப்படும். 'இந்த நிலைமையினால் யாரிடம் எதைப் பேசுவது என்று தெரியவில்லை' என்று சொல்லிக் கொண்டார் கனடாத் தமிழ் திரையுலகத்துக்கு வந்த புதுமுகம் ஒருவர்.

இது பற்றி கேட்டபோது, திரையுலக பிரமுகர் ஒருவர் கூறியதாவது,

"அவங்க ஒருத்தரும் இப்படி வேணும் என்று செய்யிறதில்லை. பழகிக் போய்விட்டது அவ்வளவுதான். ஒவ்வொருத்தருக்கும் தங்கள் தொழிலில் ஏதாவது பாதிப்பு வந்துவிடும் என்ற பயம்தான். மற்றபடி எல்லாருமே நல்லவங்க"

என்றார். ஆனால் ...... பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கல்லவா சீவன் போகுது!

## கனவுலகில் சந்திக்கும் கருவும் கணபதியும்



கரு : கணபதி அண்ணை! என்ன யோசிக்கிறீங்க!

கணபதி: மார்க்கத்திலை நல்லதொரு தியேட்டர் இருந்தால் சொல்லுங்கோ!

கரு: எவ்வளவுக்கு பார்க்கிறீயள்! ஒரு இரண்டுக்கு பார்க்கவோ? அதுக்கு குறைவா எடுக்கேலாது!

கணபதி: நல்ல சீப்பா இருக்குது. உடனை புக் பண்ணுங்கோ! (மனசுக்குள்... இருநூறு டொலருக்கு தியேட்டரிலை ஒரு ஷோ காட்டலாம் எண்டால்.. அமுக்கிடணும்.) .

கரு: (மனசுக்குள்.) .எப்படியும் வாங்கி கொடுத்துடணும். இரண்டுக்கு ... அதாவது 2 மில்லியன் டொலருக்கு வாங்கி கொடுத்தால் வாற கொமிஷன் ... பிள்ளையாரே .... உன் அருளே அருள்! எல்லாம் உன்னருள்)

அன்று முதல்





இன்று வரை

# கலை நிர்வாக திறமையில் ஒரு சிகரம் பி.விக்னேஸ்வரன்

இலங்கையில் வானொலி, தொலைக்காட்சி சேவைகளில் ஒரு காலத்தில் யாவராலும் அறியப்பட்டவர் பி.விக்கினேஸ்வரன். கனடாவுக்குள் நுழைந்த போது சரியான சந்தர்ப்பங்கள் கிடைக்காமல், தனது திறமைகளை காட்டமுடியாத நிலையில் இருந்த இவருக்கு TVI அமைந்தது அரியவாய்ப்பாக அமைந்தது. இலங்கையிலும் சரி... கனடாவிலும் சரி தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியானபடி பயன்படுத்திக் கொள்பவர் விக்கினேஸ்வரன். தனது பொறுப்புக்களை திறம்படச்செய்வதிலும் வல்லவர்.

நாடகத்துறை, வானொலித்துறை, தொலைக்காட்சித்துறையில் பல நிபுணர்களுடன் இவர் கொண்ட தொடர்புகளினால் தன் திறமையை மேம்படச்செய்து, அவற்றை செயற்படுத்தி வருகிறார். பல்வேறுபட்ட கலைஞர்களுக்கு மத்தியில், சில நிர்வாகங்களைச் செய்யும்போது ஆங்காங்கு சில அவதூறுகள், கூக்குரல்கள் எழுவது சகஜம். அவற்றையெல்லாம் சமாளிக்கும் வல்லமையும் விக்கினேஸ்வரனுக்கு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

கனடாக் கலைஞர் மத்தியில் விக்கினேஸ்வரனைப் பற்றிய தப்பான அபிப்பிராயம் இருப்பதை அவர் அறிந்திருப்பார். "ஒரு இலங்கைக் கலைஞனாக இருந்தும், இவர் பணிபுரியும் TVI தொலைக்காட்சியில் கனடாத் தமிழ் திரைப்படத்துக்கு இடம் தருவதில்லை." என்று ஆங்காங்கு சிலர் பேசிக் கொள்வது காதில் விழுந்திருக்கிறது..

ஆனால் எவரும் விக்கினேஸ்வரனின் நிலையில் ஒரு நிமிடம் இருந்து பார்த்தால் அவரது நிலைப்பாட்டினை அறியலாம். எமது திரைப்பட கலைஞர்களில் ஒருவருக்கு சந்தர்ப்பம் கொடுத்தால், எல்லோரும் கியூவில் நின்று... 'நான் பெரிதா.. நீ பெரிதா' என்று....அது பெரும் பிரச்சனையாகிவிடும் என்பதை இவர் புரிந்திருப்பார். அதுமட்டுமல்ல.. அவர் வகிக்கும் பதவியில் அவருக்குள்ள கட்டுப்பாடுகளைப் பற்றி வெளியுலகில் இருக்கும் எமக்கு என்ன தெரியும்! விஷயம் அறியாமல் நாம் மற்றவரை குறைகூறலாமா! கனடாவில் கலைஞர்களுக்கு நல்ல இடம் பெற்று தரக்கூடியவர் இவர் ஒருவரே

# கனடா கலை உலக பிரபலங்கள்

பாராட்ட வேண்டியதை துணிவாகப் பாராட்ட வேண்டும்.



"சந்திரமோகன் வானலைக்கு வந்தால் மனத்தில் கிடக்கும் அத்தனை கவலைகளும், இருந்த இடம் தெரியாமல் கரைந்துவிடும். ஏதோ ஒரு சக்தி இவருக்கு இருக்கிறது"

- கீதவாணி நேயர் ஒருவர்

ஏணிப்படிகளின் உச்சியில்

# சந்திரமோகன்

வானொலி அறிவிப்பாளர் ஒருவர் நேயர்களின் மனத்தில் நிலைப்பதற்கு 5 முக்கிய விடயங்களை குறிப்பிடுவர். குரல்வளம்: கருத்தாழமிக்க சொல்லாடல், இங்கிதமான உரையாடல், விசாலமான அறிவு, நகைச்சுவை உணர்வு. இந்த ஐந்து விடயங்களிலும் முழுமை பெற்றவர்கள் மிகக் குறைவு. இலங்கையில் மயில்வாகனம், அப்துல் ஹமீத், கே.எஸ்.ராஜா போன்ற சிலர் ஐந்து விடயங்களிலும் ஓரளவு உயர்ந்தவர்கள் என்று சிலர் கூறுவர். குரல்வளத்தில் இன்னும் வளர்ச்சியடையும் நிலையில் இருந்தாலும் மற்றைய விடயங்களில் உயர்ந்த நிலையில் இருப்பவர் சந்திரமோகன்.

ஆரம்பகாலத்தில் தமிழ் மொழி உச்சரிப்பில் மிக்கஷ்டத்தினை அனுபவித்த மோகன், தனது முழுமுயற்சியில் சில வருடத்திலேயே குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெற்றது மட்டுமன்றி, நேயர்களை ஆகர்சிக்கும் வித்தையில் மிகவும் தேர்ச்சி அடைந்துள்ளார்.

சந்திரமோகன் வானலைக்கு வந்தால், ஆக்கபூர்வமான விடயங்களை நகைச்சுவை உணர்வுடன் மக்கள் மனத்தில் புகுத்திவிடுவார். வாதப்பிரதிவாதங்களுடன் அவர் பேசும் பாங்கு, அணுகுமுறை அவருக்கே உரித்தான தனித்துவம். அந்த வகையில் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்றுவருபவர் சந்திரமோகன். கீதவாணியில் வியாழக்கிழமையில் வரும் சக்கரைப்பந்தல் என்றால் அங்கு தேன் மழை பொழியும் என்பதற்காகவே அதை எதிர்பார்த்து தவம் கிடப்பவர் ஏராளம்.

ஒரு பாடலை வெறும் பாடலாகப் பாராமல், அதை ஒரு தத்துவப் பேழையாக, இசை சுரக்கும் அமுத கலசமாக, மனதுக்கு இதமளிக்கும் பஞ்சணையாக நேயர்களிடம் கையளிக்கும் வகையை எங்கேயிருந்து இந்த மனுஷன் கற்றுக்கொண்டாரோ தெரியவில்லை.

கலைமீது இவருக்கிருக்கும் பற்றுதலை பல சந்தர்ப்பத்தில் அவதானித்திருக்கிறோம். அதன் விளைவாக கடமையில் இருக்கும் கரிசனை, அர்ப்பணிப்பு போன்றவை இவருக்கு மேலும் பெருமை சேர்க்கின்றன.

"அண்ணா, நீங்க மலேசியாவா, சிங்கப்பூரா.. கொஞ்சம் தெளிவுபடுத்துவீர்களா" என்று கேட்டேன்.

"மலேசியா.. இல்லை.. சிங்கப்பூர்" என்று சந்திரமோகன் அகடவிகடம் ஆரம்பிக்க...

"ஐயோ... தொடங்கீட்டான்யா.." என்று கூறிக் கொண்டு நடையைக் கட்டினேன்.. அவரின் கலைச் சேவைக்கு வாழ்த்துக்கள்!

# இளைஞர்களை வசமாக்கும் ஏதோ ஒன்று இவரிடம் இருக்கிறது!



# இசையமைப்பாளர் கபிலேஷ்வர்

ஒரு இசைப்பாரம்பரியத்தில் வளர்ந்தவர் கபிலேஷ்வர். தனது இளமைக் காலத்தில் இருந்தே இசை நாட்டம் கொண்ட இவரை காலம் அடையாளம் கண்டு கனடாவில் வெளிப்படுத்தியது. "காதல் நிலாவே" என்னும் இசைத்தட்டில் ஏழு பாடல்களை தானே எழுதி வெளியிட்ட சாதனையாளர் இவர். இதயம் உனதல்லவா, மலரே மௌனமா போன்ற இசைத்தட்டுகளின் மூலம் ஆரம்ப காலத்தில் புகழடைந்து இப்போது பல இசைத் தட்டுக்களை வெளியிட்டது மட்டுமன்றி, இந்தியத் திரைப்படங்களுக்கும் கனடாத் திரைப்படங்களுக்கும் இசை அமைத்தும் இருக்கிறார். அண்மையில் இவரின் இசை யமைப்பில் வந்த பல பாடல்கள் இளைஞர் கள் முணுமுணுத்துப் பாடும் அளவுக்கு பிரபல்யம் அடைந்துள்ளன. எதிர்வரும் ஆண்டுகளில் பல இசைச் சாதனைகளைப் புரிவேன் என்கிறார் இவர்.

# கனடாவில் தமிழ்த் திரைப்பட வரலாறு

கடந்த இதழில் இங்குள்ள இயக்குனர் பற்றி எழுத ஆரம்பித்தேன். எனது மனத்தில் பட்டதை துணிந்து எழுதப்போகிறேன். நான் நினைப்பதுதான் சரி என்று நான் வாதாடவும் வரவில்லை. எனது மனத்தில் இப்படியொரு கருத்து ஏற்பட்டிருந்தால் அதற்கு காரணம் ஏதோ ஒன்று இருக்கத்தானே வேண்டும். எனக்கு சகல இயக்குனர்களும் ஒரே மாதிரித்தான். கருத்துக்களை ஜீரணிக்க பக்குவமற்ற கலைஞர்கள் தொடர்ந்து நான் எழுதும் பகுதியை வாசிக்காமலே விட்டுவிடுங்கள். மன்னித்துவிடுங்கள்... என்னால் இதை எழுதாமல் தவிர்க்க முடியவில்லை.

திரைப்படம் ஒன்றை பொதுமக்கள் மத்தியில் வெளி விட்டால் அது பற்றி கருத்துக்கூற மக்களுக்கும் விமர்சகர்களுக்கும் உரிமை உண்டு. 'நாங்க படுறபாட்டைத் தெரியாம எழுதவந்துட்டாங்க' என்று கூறி தப்பித்துக்கொண்ட காலமெல்லாம் மலையேறி விட்டது.

எங்கடை சொந்தக்காரர் வைத்திருக்கிற சாப்பாட்டுக் கடை என்பதற்காக, உப்புக்கூடி - உளுத்துப்போன சாப்பாட்டை நாம் பல்லைக் கடித்துக்கொண்டு சாப்பிட வேண்டும் என்ற எந்த நியதியும் எவருக்கும் இல்லை... யாரேனும் அப்படி எதிர்பார்த்தால் அவர்களை விட நிலத்துக்குள் தலைபுதைத்த தீக்கோழிகள் இருக்கமுடியாது. கனடாத் திரைப்படத்துறை பற்றி எத்தனையோ கடுமையான விமர்சனங்கள் வந்துவிட்டன... நம்ம படங்களை நம்மவர்களே பார்க்கிறார்கள் இல்லை என்ற உண்மையும் நமக்கு தெரியும் .. இது ஏன்.. எப்படி... எதற்காக என்று எத்தனை சினிமாக்காரங்க யோசிக்கிறாங்க..?

நாய்க்கு கல்லை எறிந்தால் அது எங்கை பட்டாலும் காலைத்தான் தூக்குமாம்... அது மாதிரி.. எடுத்ததுக்கெல்லாம் நம்ம சினிமாக்காரங்கள் சொல்லும் சாட்டு... நம்ம சனம் தென்னிந்திய சினிமா மாயைக்குள் கிடக்குது...

அதுவும் ஒரு காரணமே தவிர, அது மட்டும்தான் காரணம் அல்ல என்பது இவர்களுக்கு தெரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ளும் மனப்பக்குவம் அற்றவர்கள் நம்ம திரைப்படக் கலைஞர்களில் அநேகர்.. அதாவது தாங்கள் ஏதோ ஒழுங்காக படம் எடுத்துவிட்டோம்.. சனங்கதான் பிழைவிடுறாங்க என்ற நினைப்பு. ஒன்று சொல்லட்டுமா? தாம் தொடர்புபட்டது தவிர்ந்த மற்றைய கனடாத் தமிழ்த் திரைப்படத்தை பார்க்காத எத்தனை கனடாக் கலைஞர்கள் இருக்கிறார்கள் என்று தெரியுமா? அப்படியான எத்தனை இயக்குனர்கள் கனடாவில் உள்ளனர் தெரியுமா? நீண்ட காலம் இருந்த இந்தத் தன்மை இப்போது, கனடாத் திரைப்படத்துறை உருவாகும் சமயத்தில் நீங்கியிருக்கிறது என்பதோ என்னவோ உண்மைதான்! ஆனால் இவ்வளவு காலமும்....! நாம் இப்போது திருந்தியிருக்கிறோம். (ஓரளவு?) எல்லோரும் கைகோர்த்து நிற்கிறோம். ஆனால் நாம் முன்பு செய்த தவறுகளை மீளப்பார்த்தால்தான் அவை மீண்டும் இடம்பெறாது தவிர்க்கமுடியும்.

இயக்குனர் என்றால் யார்? இதற்கு வரைவிலக்கணம் கிடையாது. இந்திய சினிமாவில் இயக்குனர்களை வைத்துக்கொண்டு கனடா தமிழ்சினிமா இயக்குனர்கள் தம்மை எடைபோடக்கூடாது. வளரும் நிலையில் சினிமாத்துறை கனடாத் தமிழர்மத்தியில் இருக்கும்போது இயக்குனர்கள் 'எழுதப்படாத' தம் பொறுப்புகளை உணரவேண்டும்.

ஒரு திரைப்படத்தை சகல விதத்திலும் சிறப்புற தரவேண்டிய பொறுப்பு இயக்குனருக்கு இருக்கிறது. அப்படியானால் தம்மைச் சுற்றவர இருக்கிற "இரசிகர்" என்ற சூழலில் இருந்து எழும் எதிர்பாராத தடைகளை எப்படி நீக்குவது என்னும் ஆராய்வு இயக்குனர்களுக்கு தேவை. இயக்குனருக்கு மட்டும் அல்ல... தயாரிப்பாளர்களுக்கும் தேவை... ஏன் கனடா தமிழ் கலைஞன் ஒவ்வொருவருக்கும் தேவை. இதற்கு ஒரு TEAM WORK தேவை. இங்கு அது கிடையாது. இதுதான் மிகப் பெரிய குறைபாடாக இருந்து வருகிறது.

நாம் ஒருவரை ஒருவர் குறை சொல்லிக்கொண்டே இருக்கிறோம். (கனடாத் திரைப்படத்துறைக்குள் இதில் விதி விலக்கு காண்பது அரிது). ஆனால் எதைச் செய்யலாம் என்று சிந்திக்க எவரும் விரும்புகிறார்கள் இல்லை. இப்போது, திரைப்படத்துறை நமக்குள் உருவாகி இருக்கும் நேரத்திலே இதுபற்றிய சிந்தனை எழுந்திருக்கிறது. இது திரைத்துறையில் ஏற்பட்ட மிகப்பெரும் மாற்றம். அண்மையிலே பல்வேறு குழு மட்டத்தில் கனடாத் திரைப்படத் துறையை உயர்த்த பல கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்திருக்கிறது. இது இங்குள்ள "சிலருக்கு" பிடிக்கவில்லை. இவ்வாறு திரைப்படத்துறை வளர்ந்தால் தங்களின் "ஷோ காட்டுதல்" தடைப்பட்டுவிடும் என்று பயப்பட்டு, பல குழறுபடிகளை உருவாக்குகிறார்கள். எதற்கும் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். இதையெல்லாம் மீறி கனடா திரைப்படத்துறை எழுந்துவிட்டது..... எப்படி? அப்படீன்னா...கனடாவில் கலைஞர்கள் உண்மையை உணர ஆரம்பித்துவிட்டனர் என்றுதானே பொருள்.

ரொறன்ரோவில் உள்ள குறும்திரைப்படக்காரர்கள், புத்திஜீவி என்று தம்மைத்தாமே முத்திரை குத்திக்கொண்டவர்கள் போன்று சிலர் கனடா தமிழ் சினிமாத்துறை வளர்ச்சியினை வெளிப்படையாகவே விரும்புகிறார்கள் இல்லை. தமது மதிப்பு குறைந்துவிடும் என்ற ஒரு அச்சம் இவர்களுக்கு இருக்கிறது. கனடாத் திரைப்படத்துறை முன்னேற, மக்கள் மத்தியில் நடிக நடிகையர், பாடகர்களின் மவுசு அதிகரிக்க... ஊடகங்களை சார்ந்தவர்கள் பிரபலம் குறைந்துவிடும். ஆகையினால்தான் ஊடகங்கள் கனடாத் திரைப்படத்துறையை ஊக்குவிக்க பின்னிற்கின்றன. (தொடரும்)



# கனடாவில் தமிழ் திரைப்பட
## வரலாற்றில் மறக்க முடியாத பதிவு

கனடாத் தமிழர்களுக்கு ஒரு திரைப்படத்துறையை உருவாக்க கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் அத்திவாரமிட்டவர் ஸ்ரீமுருகன். "உயிரே உயிரே" என்னும் திரைப்படத்தின் மூலம், பல கலைஞர்களை வெளிக்கொணர்ந்தவர். இன்று கனடாத் திரையுல கில் முன்னிற்கும் பலரும் இவரால் அறிமுகம் செய்யப்பட்டவர்களே. உயிரே உயிரே படத்தின் வெற்றிவிழாவில் நாடகக் கலைஞர் அச்சுதன்பிள்ளை அவர்கள் ஸ்ரீமுருகனை கௌரவித்த பதிவினை இங்கு காண்கிறீர்கள்.

## டெமிஷன்



சுகம்சுகமே என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகியவர் டெமிஷன். திரைப்படம், நாடகங்களில் உள்ள ஒரு "வெறித்தனமான விருப்பு" இவரை கலைத்துறைக்குள் தள்ளி யிருக்கிறது. ஆர்வம் இவருக்கு நல்லதொரு வடிகாலாக அமைந்திருக்க, திரைத்துறைக் குள் காலடி எடுத்து வைத்திருக்கிறார். இவரது முதலாவது படத்தில் இவருக்கு கிடைத்த இரு கதாநாயகிகளும் இவரிலும் வயது கூடிய தோற்றமுடன் இருப்பது, இவரது திறமையின் வெளிப்பாட்டை கொணர்வதில் தடையாக அமைந்திருக் கிறது. தொடர்ந்தும் ஓய்வு நேரங்களில் திரைப்படங்கள் நாடகங்களில் நடித்துவரும் இவருக்கு பிரகாசமான எதிர்காலம் உண்டு.

## கொடுத்துவைத்தவன் நீயல்லவோ!



சுகம் சுகமே என்று புவனாவிடம் கூறும் டெமிஷன்

# கிசுகிசு

## "அண்ணை, நான் சொன்னதெண்டு சொல்லிப்போடா தேங்கோ"



கனடாத் திரைப்பட வளர்ச்சி பற்றிய ஆலோசனையில் திரையுலகப் பிரமுகர்கள் - சந்திப்பினை ஏற்பாடு செய்தவர் தயாரிப்பாளர் ஸ்ரீமுருகன்

### எனக்கு தமிழ் வேணும்

தமிழே பேசத் தெரியாத கனேடிய தமிழ் நடிகை இப்போது தமிழ் படிக்க ஆரம்பித்திருக்கிறார்.. தான் பேசும் தமிழ் நண்பர்களிடம் தமிழில் கதைக்க முயற்சி செய்கிறார். தமிழர்களிடம் இருந்து விலகி வேற்று மாகாணத்தில் வசித்தமையால் தமிழ் கற்கும் வசதி இல்லாமல் போனதாம். ஆங்கில நண்பர்கள், ஆங்கில கலாச்சாரம் என்று அதில் மூழ்கியிருந்த இந்த நடிகையிடம் "கனடாவில் இப்போது 3 லட்சம் தமிழர் இருக்கிறார்கள்" என்று சொன்னதும் அதிசயப்பட்டுப் போனாராம். தான் காணும் தமிழ் பிள்ளைகளுக்கு "கட்டாயமாக தமிழ் படியுங்கள். என்னைப் போல, பிற்காலத்தில் வருத்தப்படாதீர்கள்" என்று சொல்வாராம். அண்மைக் காலமாக தொலைக் காட்சி விளம்பரப்படங்களிலும் இவரைக் காணமுடிகிறது.

### உருப்படாத பத்திரிகை

மூன்றெழுத்து நடிகர் ஒருவர் கனடாத் தமிழ்ப் பத்திரிகையில் தனது விளம்பரத்தைக் கொடுத்து வந்தாராம். தென்னிந்திய சினிமாவுக்கு, நடுவில் முழுப் பக்கம் ஒதுக்கியிருக்கிறீர்கள் அதில் கனடா தமிழ் திரைப்பட செய்திகளையும் பிரசுரியுங்கள் என்றாராம். அதற்கு பத்திரிகைக்காரர் சொன்ன பதில் தூக்கி வாரிப்போட்டதாம். தென்னிந்திய சினிமா செய்தி வரும் பக்கத்தில்தான் தங்கள் விளம்பரங்களை போடவேண்டும் என்று வேறு வர்த்தகர்கள் கட்டளை இட்டுள்ளனர் என்று சொன்னாராம். கோபம் கொண்ட நடிகர் அந்தப் பத்திரிகையில் தனது விளம்பரத்தை நிறுத்தி விட்டாராம்.

### சினிமாவால் வந்த தீட்டு

கடவுளின் பெயரைக் கொண்ட தயாரிப்பாளர் ஒருவர் அந்தக்கடவுளின் பெரும் பக்தர். கந்த சஷ்டி விரதத்தை கடுமையான முறையில் அனுஷ்டித்து வருபவர். விரதகாலத்தில் இன்னொரு தயாரிப்பாளர் அவரை தொலைபேசியில் அழைத்து சினிமாத்தனமாக உரையாடியிருக்கிறார். விரதம் இருக்கும் காலத்தில் இப்படி என்னுடன் கதைக்க வேண்டாம் என்று "விரதம் இருக்கும் தயாரிப்பாளர்" மீண்டும் மீண்டும் கூறவும் மற்ற தயாரிப்பாளர் செவிசாய்க்கவில்லையாம். இதனால் ஆத்திர முற்ற முருகபக்த தாயாரிப்பாளர் தொலைபேசியை அடித்து வைத்துவிட்டாராம். இதனால் இரண்டு தயாரிப்பாளர்களுக்கும் இடையில் லடாய்! காணுகின்ற இடத்தில் எல்லாம் மூஞ்சியை நீட்டிக்கொள்கின்றனராம். "இவங்க இப்படித்தான். அடிச்சுவாங்க... அப்புறம் கட்டிப் புடிச்சுவாங்க" என்று கனடா தமிழ் சினிமா வட்டாரத்தில் பேசிக்கொள்கிறார்கள்.

### ஈயடிக்காத கொப்பி!

கனடாவில் கவிஞர் ஒருவர் எழுதிய பாடல் பலராலும் பாராட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பாடல் பற்றிய செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த தமிழ் பாடல் ஒன்றின் கருத்தினை அப்பட்டமாக கொப்பி அடித்திருக்கிறாராம் கவிஞர். அது மட்டுமல்லாமல் பாடலில் வரும் வரிகள்கூட பொறுக்கல் தானாம். இந்த விடயத்தை வானொலி அறிவிப்பாளர் ஒருவர் தோண்டி வெளிக்கொணர்ந்திருந்தாராம். இந்த தோண்டலுக்கு உதவி செய்தவர் இலங்கையில் பிரபலமான வானொலிக் காரராம். இதனால் கவிஞருக்கும் அறிவிப்பாளருக்கும் கொஞ்சமல்ல... அதிகமாவே கறளாம். இதற்கு விளக்கம் அளித்த முன்னாள் பேராசிரியர் ஒருவர், தமிழ் இலக்கியம் ஒன்றில் வரும் பாடலைச் சொல்லி, இந்தப் பாடலை அடிப்படையாக வைத்து இரண்டு கவிஞரும் எழுதியிருக்கிறர்கள். இதை கொப்பி என்று கொச்சைப்படுத்தக்கூடாது என்று அறிவுரை சொல்லியிருக்கிறாராம்.

### அசடு வழிந்தவர் யார்?

கனடாவில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் ஒன்றில் தனக்கும் நடிக்க சந்தர்ப்பம் தேவை என்று அலுப்போ அலுப்புக் கொடுத்து ஒருவர் நடித்தாராம். படத்தில் பாதிக்கு மேல் நடித்துவிட்டாராம். ஒருநாள் சூட்டிங் நடந்து கொண்டிருந்த போது, பிரச்சனைப்பட்டு தான் இனி நடிக்க வரமாட்டேன் என்று சென்று விட்டாராம் இந்த நடிகர். படத்தில் பல காட்சிகளில் தான் நடித்திருந்தமையால் இனி எப்படியும் தன்னை கெஞ்சி வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்த நடிகரில் தலையில் பெரிய கல்லு விழுந்துவிட்டது. "தப்பினோம்... பிழைத்தோம்" என்று நினைத்த டைரக்டர் அந்தக் கதாபாத்திரத்தையே கதையில் இருந்து முழுமையாக விலக்கி கதையை மாற்றிவிட்டாராம். படம், திரைக்கு வந்தபோது, தன்னைத் திரையில் காணாத நடிகருக்கு அசடு வழிந்ததாம். தென்னிந்திய திரைப்பட நடிகரின் சாயல் கொண்ட இவரைத் தெரியுமா!

### காதல் தொலைபேசி அழைப்பு வேணாங்க!

கனடாவில் தயாரிக்கப்பட்ட சில சில திரைப்படங்கள் ஐரோப்பாவிலும் இலங்கையிலும் திரையிடப்பட்டன. இவற்றைப் பார்த்த இரசிகர்கள் அசந்து போய் விட்டனராம். நடிகர்களுக்கும் இயக்குனர்களுக்கும் பல பராட்டுக் கடிதங்களாம். ஐரோப்பாவில் இருந்து தெலைபேசி அழைப்புக்களாம். இதனால் கனடாவில் நடிகர் ஒருவர் வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் பெரும் ரகளை. ஐரோப்பாவில் இருந்து ரசிகை ஒருவர் தொலைபேசியில் அழைத்திருக்கிறார். அதற்கு நடிகரின் மனைவி பதில் அளித்திருக்கிறார். மனைவியின் குரல் சற்று தடிப்பானதாம்.

"நீங்க யார் ..... அவருடைய அம்மாவோ" என்று ரசிகை கேட்க, நடிகரின் மனைவிக்கு சுருக்கென்று ஏறிவிட்டதாம். தொலைபேசியை அடித்து வைத்தது மட்டுமல்லாமல்,

"இனி நடிக்கப் போகக்கூடாது" என்று கணவனுக்கு கட்டளையிட்டுள்ளாராம். திரைப்படத்துறை சம்பந்தமானவர்கள் தொலைபேசியில் அழைத்தால் "ஆள் இல்லை" என்று சொல்லி வெட்டி விடுகிறாராம்.

### காத்திருப்பு

வீடு விற்பனை முகவர் ஒருவருக்கு திரைப்பட ஆசை வந்துவிட்டது. திரைப்படம் எடுப்பதற்கு முற்பணம் கொடுத்துவிட்டு ஒரு வருடமாக எப்போது படம் வெளிவரும் என்று காத்திருக்கிறார். படம் எடுபடுகிறதோ இல்லையோ என்றுகூட இவருக்கு தெரியாது. அவ்வளவு பிசி. இவரின் டைரக்டரின் மறுமொழி இன்னும் கிடைக்கவில்லை என்பதால் மனம் உடைந்த இவர், பழைய நினைவுகளை அசை போட்டுக்கொண்டிருக்கிறாராம்.

**ஒரு கருத்து:**
**திரைப்படத்துறை மட்டுமல்ல.. பொழுதுபோக்கு சம்பந்தப்பட்ட சகல விடயங்களுக்கும் ஒரு ஊக்குசக்தி கிசுகிசு.**



# கனடா தமிழர் திரைப்படங்களுக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு! வாழும் இடத்தில் மட்டும் ஏன் செருப்பு? உலகத் தமிழினமே திகைப்பு!

கனடாவில் தயாரிக்கப்பட்டு வெளிவந்த சில திரைப்படங்களைப் பார்த்த இலங்கைவாழ் ரசிகர்கள் தங்கள் முழுஆதரவினை வெளிப்படுத்திய சம்பவங்கள் பல அண்மையில் நடந்துள்ளன. இதே போல ஐரோப்பிய நாடுகளிலும் ரசிகப்பெருமக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றிருக்கிறார்கள். கனடாவில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை ஐரோப்பிய தொலைக்காட்சி சாதனங்கள் ஒளிபரப்பியபோது, எண்ணிலடங்கா ரசிகர்கள், கனடாவில் இந்த திரைப் படங்களை தயாரித்தவர்களையும் இயக்கியவர்களையும் அழைத்து புகழாரம் சூட்டியிருக்கிறார்கள். மீண்டும் இந்தப் படங்களை ஒளிபரப்பாக்கும்படி, தொலைக்காட்சி நிறுவனங்களை கேட்டிருக்கின்றனர்.

திவ்யராஜனின் 'சாகா', பரராஜசிங்கத்தின் 'மெதுவாக உன்னைத் தொட்டு', ஸ்ரீமுருகனின் 'சுகம் சுகமே' ஆகிய படங்களே இந்த பரபரப்பினை உண்டு பண்ணின. 'சுகம் சுகமே' கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வெளியிடப்பட்டபோது, அதைப்பார்த்த பல்கலைக் கழக பேராசிரியர்கள் படத்தின் டைரக்டரான ரவி அச்சுதனை அழைத்து தம் மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

கனடாவில் இந்தப்படங்கள் எதுவும் ஒளி பரப்பப்படவில்லை என்பதனை அறிந்த அவர்கள் ஆச்சரியப்பட்டனர். எங்கேயோ ஏதோ பிழை இருக்கிறது என்பதனை சொல்லி மனம் வருந்தினர். தென்னிந்திய மக்கள் கனடாவாழ் தமிழர்களின் திரைப்படங்களை ஏற்கும் நிலை வந்தாலும், இங்கு (கனடாவில்) அது சரிப்பட்டுவராது என்று விசயம் அறிந்தவர்கள் சொல்லியபோது, எதை நம்புவது எதை நம்பாமல் விடுவது என்று எதுவுமே புரியாமல் தமிழ்கலையுலகம் திகைக்கிறது.

## வாக்குறுதி

கனடாத் திரைப்படக் கலை வளர்வதற்கு எம்மாலான உதவிகள் எப்போதும் இருக்கும். அது பற்றி நாம் கருத்தில் எடுத்துக்கொள்வோம்.

-வானொலி நிகழ்ச்சி ஒன்றில் சி.ரி.ஆர். கலாதரன்

கனடா கலைஞர்: மகராசன்... நீங்க நல்லா இருக்கணும்.





## வைக்கோல் பட்டடையில் நாங்(ய்)கள்

தென்னிந்திய நடிகையர் கவர்ச்சியாக நடித்த படங்களை பார்ப்போம். ஆனால் கனடாவில் இருந்து வரும் படங்களில் கவர்ச்சி இருந்தால் அதை லண்டனில் திரையிடமாட்டோம்.

- லண்டன் தமிழ் திரைப்பட அபிமானத்தின் வண்டவாளம்

பெண்களின் நிர்வாணம் பற்றி தாங்கள் கவிதை எழுதினால் அதற்கு பெயர் யதார்த்தம். கனடாத் தமிழ் திரைப்படத்தில் கொஞ்சம் ஆடைவிலகி கவர்ச்சி வந்தால் அது பெண்களை அவமானப்படுத்துவதாகும்.

- கடைகெட்ட கனடா முற்போக்கு

குறும்திரைப்படத்தில் வந்த காட்சி..... உயர்மாடிக் கட்டிடத்தில், ஒரு மாடியில் உரலில் உலக்கையை இடிக்க, அதே நேரம் இன்னொரு மாடியில் அது.. நடக்க, இதைத் திரையிட்டால் அது முற்போக்கு. கனடா தமிழ் சினிமாவில் தொப்புள் தெரிந்தாலே ஆபாசம்.

- குறுந்திரைப்படக்காரரின் குறுமனம்

எவருமே கேள்விப்படாத கங்கேரிய மொழிப்படத்துக்கும் ரஸ்சிய மொழிப்படத்துக்கும் விமர்சனம் செய்தால் புத்திஜீத்தனம்.. கனடாவில் தமிழர் தயாரிக்கும் திரைப்படத்தை பார்த்தால் அது பிற்போக்குத்தனம்.

- கனடா அறிவுக் கொழுந்துகள்

# கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது நகைச்சுவை வில்லனாக மைக்கல் ஜக்சன்







வெளியீட்டு விழா ஒன்றில் சாவகாசமாக ஒரு பார்வையாளராக அமர்ந்திருந்தார் நடிகை யசோதா. 'அம்மா' கரெக்டராக இருந்தாலும், 'அக்கா' கரெக்டராக இருந்தாலும் பின்னிவிடுவார் யசோதா. சில படங்களில் இவரின் வில்லத்தனமான செய்கைகளில், பலருக்கும் இவர்மீது கொஞ்சம் கோபம்கூட வந்திருக்கும். வீடென்றால் வீடு... குடும்பமென்றால் குடும்பம்.. கலை என்றால் கலை.. என்று எதிலும் ஒரு வரையறை வைத்திருப்பவர் யசோதா. சினித்திரன் பத்திரிகையில் சார்பில் இவரிடம் சில கேள்விகளைக் கேட்கிறோம்.

*அம்மா ... உங்களைப் பலபடங்களில் பார்த்திருக்றோம். எல்லாப் படங்களுக்குள்ளேயும் எப்படிப் புகுந்தீங்க.. ..*

இந்தியப்பாணியில் 'அம்மா' என்று சொல்லாமல் இலங்கையர்கள் போல 'அக்கா' என்று சொல்லுங்க. நீங்க கேட்கிறதைப் பார்த்தால், ஏதோ நானாகப் போய் தேடிக்கேட்டு நடிச்சது மாதிரி கேட்கிறீங்களே. நடிப்பை பார்த்தாங்க.. தயரிப்பாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் ஒரு நம்பிக்கை வந்திருக்கு போல இருக்குது. கூப்பிட்டாங்க.. நடிச்சேன்.. எல்லாமே நல்லா வந்திருக்குது. அவ்வளவுதான்.

*கதிரொளி, நான் யார், சகா, தமிழிச்சி போன்ற படங்களில் நடித்திருக்கிறீர்கள். பார்த்திருக்கிறேன்... இப்போது ஏதாவது கைவசம்....?*

வரப்போற வருஷத்தில், செந்தில்நாதனின் மனிதம், கே.எஸ். பாலசந்திரனின் காதல் வானிலே, மதிவாசனின் வேலி .... இன்னும் சில குறுந்திரைப்படங்கள்.. இப்படி வந்துகொண்டே யிருக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள்.. இந்தப் படங்களில் எல்லாம் சொல்லக்கூடிய வகையில் நடித்திருக்கிறேன். வேறு சின்னத் திரையிலும் நடிக்கிறேன். இன்னும் பல படங்களில் நடிக்க கேட்டிருக்கிறார்கள். நேரம்தான் பிரச்சனை. பார்ப்போம். இப்போதுதான் கனடாத் தமிழர்களின் திரைப்படத்துறைக்கு சூடுபிடித்திருக்கிறது. இது நல்ல சகுனம்தானே!

*உங்க உருவத்தில் குஷ்புவின் ஜாடையிருக்கிறதே. கதாநாயகி யாக நடிக்கும் நோக்கம் இல்லையா?*

அப்படி ஒரு கதாபாத்திரம் கிடைத்தால், அதைக்கூட சிறப்பாக செய்வேன் என்ற தன்னம்பிக்கை என்னிடம் உள்ளது. அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்காமல் போகுமா என்ன.. அதற்கும் ஒரு காலம் கனியும்... முயற்சி இருந்தால் எந்த வேடமானாலும் செய்யலாம்.

*எப்படி இந்த திரைப்படத்துறைக்கு வந்தீர்கள்?*

ஈழத்தில் தெல்லிப்பளை எனது சொந்த இடம். அங்கு வாழ்ந்த காலத்தில் நாடகத்துறையில் நாட்டம் இருந்தது. கனடாவுக்கு வந்தபோது உலகத்தமிழர் உருவாக்கிய பல நாடகங்களில் நடித்து வந்தேன். நாடகத்துறையில் இருப்பவர்கள், திரைப்படத்துறை சார்ந்தவர்கள் எனது நடிப்பினைப் பார்த்து, திருப்தியுற்று, தமது படைப்புக ளிலும் நடிக்குமாறு கேட்டுக்கொண்டனர். இப்படியாக எனது திரையுலக பிரவேசம் அமைந்தது.

*ஈழத்தைச் சேர்ந்த தமிழ் பெண் ஒருவர் திரைப்படத்தில் நடிப்பது என்றால் அது பெரிய அக்கினிப் பிரவேசம் என்கிறார்களே.. அது என்ன சிக்கல்... நீங்கள் எப்படி துணிந்து இறங்கினீர்கள்?*

அதெல்லாம் ஒரு காலம்.. இப்போது எல்லாம் மாறிவிட்டது. என்றாலும் சில பழமைவாதிகள் அங்கும் இங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். கனடாவில் ஆணுக்கு நிகராக அனைத்து தொழில்களையும் பெண்கள் செய்யலாம். திரைப்படம் மட்டும் நடிக்க கூடாதா. என்னைப் பொறுத்த



பொழுதுபோக்காக நடிப்பவர்கள் சிலர். பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் நடிப்பவர் இன்னும் சிலர். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும் மனம் கொண்டவர்கள் வேறு சிலர். ஆனால்

**"ஆயுள் உள்ளவரை நடித்துக்கொண்டே இருப்பேன்"**

என்று மனம் நெகிழச் சொன்ன கனடிய தமிழ் நடிகை யசோதா.

நடிப்பு என்பதனை தொழிலாக இல்லாமல், பணியாக நினைக்கும் ஒரு சிலரில் இவரும் ஒருவர். சினித்திரன் பத்திரிகை சார்பில் அவருக்கு எமது நன்றியும் வாழ்த்தும் உரித் தாகட்டும்.

– கலைப்பிரியன்

வரை எனது குடும்பத்தில் எல்லோரும் கலையில் நாட்டம் உடையவர்கள். மொழி வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள். எமது கலைப்படைப்பு உலக அரங்கில் அரங்கேற வேண்டும் என்பதில் விருப்பம் உடையவர்கள். அதனால்தான் எனது பெண் பிள்ளை களையும் படங்கள், நாடகங்களில் நடிக்க வைத்தி ருக்கிறேன்.

*ஒரு நாடக நடிகையாக... திரைப்பட நடிகையாக ... குறுந்திரைப்பட நடிகையாக..சின்னத்திரை நடிகையாக .. குடும்பத்தலைவியாக... வேலை செய்பவராக... எப்படீங்க இத்தனை விடயங்களையும் சமாளிக்கிறீங்க... அதுவும் கனடாவில்.. இந்த மாஜிக் பற்றி சொல்வீர்களா?*

எல்லாமே மனம்தான். 'டைம்' மனேஜ்மென்ட் (நேர முகாமைத்துவம்) என்பது சரியாக அமைத்துக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்... இது இது இப்போது என்று கண்டிப்பான வரையறை வைத்துக் கொண்டால் எதையும் வென்றுவிடலாம். எதிலுமே ஒரு கண்டிப்பான முறையில் நேரத்தினைப் பயன்படுத்திவருகிறேன்...

*இதெல்லாம் உங்களுக்கு தேவைதானா... இப்படி யெல்லாம் கனடாவில் கஷ்டப்படவேண்டுமா?*

எல்லோரும் அப்படி நினைத்துவிட்டால், எங்கள் கலைகள் வளருவதெப்படி? நாம் உலகத்தில் நம்மை அடையாளப் படுத்துவதெப்படி? சிலசில தியாகங்களை நாம் ஒவ்வொ ருத்தரும் செய்யவேண்டும் என்று நினைப்பவள் நான்.

*இன்னும் எத்தனை காலம் நடிப்புத்துறையில்....?*

ஆயுள் உள்ளவரை நடித்துக்கொண்டேயிருப்பேன். இது எம் கலைமேல் நான் கொண்ட ஆர்வம்... பக்தி..



# ஆயுள் உள்ளவரை நடித்துக் கொண்டேயிருப்பேன் - யசோதா



# கனடாத் தமிழர்களுக்காக திரைப்படத்து



எமக்கென்று ஒரு மொழி ... எமக்கு என்று ஒரு நாடு ... எமக்கு என்று ஒரு பண்பாடு

இதனையும் மீறி எமக்கென்று ஒரு கலைப் பாரம்பரியம்.. எமக்கென ஒரு திரைப்படத்துறை..

புதிய சிந்தனைக்குள் தன்னை நிலைநிறுத்த ஆரம்பித்துவிட்டனர் கனேடியத் தமிழ்க்கலைஞர்கள். படிப்படியாக மெல்லென அரும்பிய சிந்தனைகள், இன்று மலரத் தொடங்கிவிட்டன என்று கட்டியங் கூறுகிறான் சினித்திரன்.

கனடாத் தமிழ் திரைப்படத்துறை...
அவ்வப்போது சிலர் முணுமுணுத்துக் கொண்டிருந்த வாசகம். மனசுக்குள் மண்டிக் கிடந்த ஆசை..

பல ஆண்டுகளுக்கு முன்னர் கே.எஸ்.பாலச் சந்திரனுடன் இது பற்றி கலந்துரையாடியபோது "நல்ல விஷயம் தம்பி. இது சரிவரும் என்று நினைக்கிறீர்களா?" என்று சற்று நம்பிக்கை இழந்து சொன்னார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவருடன் பேசியபோது,
"அதற்கான அத்திவாரம் தானே உருவாகிவிட்டது"
என மிகுந்த நம்பிக்கையுடன் சொன்னார். காலம் மாறிவிட்டது. நம் கலைஞர்கள் மாறிவிட்டனர். நீ.. நான்.. என்று ஒருவருக்கொருவர் முரண்பட்டுவந்த தன்மை மாறி, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, "நம் கலை... நம் திரைப்படத்துறை" என்று சொந்தம் கொண்டாடி மகிழும் நிலை வந்துவிட்டது.







# ற உருவாகுகிறது

இளைய தலைமுறை இயக்குனர் லெனின் அவர்களுடன் பேசினேன்.

"நமக்கென்று ஒரு திரைப்படத்துறை உருவாயிட்டு வருவது பற்றி என்ன நினைக்கிறீங்க"

லெனின் எந்த விடயத்தையும் நடைமுறையில் சாத்தியமா என்று ஆராயும் பக்குவம் கொண்ட இளைஞர்.

"நமக்கு என்று ஒரு திரைப்படத்துறை வரணும்.. வந்துகொண்டிருக்கிறது... இதோ வந்துவிட்டது"

என்று அவர் கூறும்போது அவரின் பேச்சில் இருந்த தொனிப்பு திரைப்படத் துறையில் அவருக்கிருந்த அதிபக்தியைக் காட்டியது.

கடந்த மாதம் திரைப்படம் பற்றிய ஒரு கருத்தரங்குக்கு சென்றிருந்தேன். கனடாத் திரைப்படத்துறை ஜாம்பவான் ஸ்ரீமுருகன் ஒழுங்கு செய்திருந்தார். அங்கு பத்திரிகை நண்பர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆணித்தரமாக சொன்ன கருத்தும் இதுவேதான்

"முதலில் கனடா திரைப்படத்துறையை நிலைநிறுத்துங்கள். அதுவேதான் உட னடித் தேவையான செயற்பாடு"

அவர் சொன்ன வாய் மூகூர்த்தம் பலித்துவருகிறது.

## திரைப்படத்துறை என்றால் என்ன?

ஏதோ வீடியோ கடை ஆரம்பிப்பது போன்றோ அல்லது சங்கம் ஆரம்பித்து தலைவர் பதவி தெரிவு செய்வதோ அல்ல. அல்லது film industry என்றது வும் அது 'வெயர்கவுஸ்' எடுத்து செய்கிற விடயமும் இல்லை.

திரைப்பட நிலைப்புக்கான தளத் தினை உருவாக்கி, அதன் பரவுகை, கலைத்துவம், தொழில்மயம், சந்தைப் படுத்துகை, அங்கீகாரம் இன்னபிற விடயங்களை இறுக்கமான முறையில் ஏற்படுத்தும் சாதனம்.

இப்படித்தான் திரைப்படத்துறையின் ஆரம்பம் அமையும். இதன் தொடர்ச்சி பல கிளைகளைக் கொண்டதாக விரிபட்டு ஒரு கலைப்பிரமாண்டத்தை நோக்கி நகரும்.

இந்த வளர்ச்சிக்கு சாதகமான விடயங்களும் கனடாத் தமிழர் மத்தியில் உண்டு. அதே அளவுக்கு பாதகமான விடயங்களும் உண்டு. பாதகமான விடயங்களை இலகுவில் அகற்றுவதில் பிரச்சனைகள் உண்டு. அதை அகற்ற முயற்சித்தால் திரைப்படத்துறையின் ஆரம்பத்திலேயே சில ஆட்டம் ஏற்படும். அதை படிப்படியாகவே அகற்ற வேண்டி இருக்கிறது.

**கனடா தமிழ் திரைப்பட துறைக்கு வாழ்த்துகள்**

**-சினித்திரன் ஆசிரியர்**





# கனடாவில் தமிழ் திரைப்படத்துறைக்குள் பெண்கள் படையெடுப்பு



மாயா : காதலனுக்காய் காத்திருப்பதில் ஒரு சந்தோசம்.

கனடாவில் தமிழ்ப் படங்களில் நடிப்பதற்கு பல இளம்பெண்கள் முன்வந்துள்ளனர். பெற்றோர்களும் திரைப்படம் சம்பந்தமான அனைத்துத் துறைகளிலும் தம் பெண்பிள்ளைகளை ஊக்கப்படுத்திவருகின்றனர். ஒரு சில மாதங்களில் ஏற்பட்ட இந்த மாற்றம் கனடா திரைப்படத்துறை வளர்ச்சியில் குறிப்பிடக்கூடிய திருப்பம் என்று சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முன்னர் எல்லாம் திருமணம் செய்தபின்னர் பெண்களை நடிப்பதற்கு கணவன் அனுமதிப்பதில்லை. இப்போது இந்த விடயத்திலும் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது.

இது பற்றி தந்தையார் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்

"இன்று இளம் பிள்ளைகள் பல பிரச்சனைகளில் மாட்டிக்கொள்வதற்கு காரணம், அவர்களுக்கு சரியான பொழுதுபோக்கோ அல்லது கலை ஈடுபாடோ இல்லாமல் இருப்பதுதான். திரைப்படங்களிலும், பாடல்களிலும் பொதுவாகவே இளம் பிள்ளைகளுக்கு ஒரு விருப்பம். அதில் இவர்களை ஈடுபட வைப்பதால் பிழையான விடயங்களில் உள்ள நாட்டத்தை முற்றாக நீக்கமுடியும். இதை எனது அனுபவத்தில் கண்டிருக்கிறேன்"

என்று தெரிவித்தார். இவ்வாறான கருத்து பல பெற்றோர்களிடம் காணப்படுகின்றது. சில பெற்றோர்கள் சினிமா தயாரிப்பாளர்களை அணுகி தம் பிள்ளைகளுக்கு "சான்ஸ்" கேட்டிருக்கிறார்கள் என்றால் நம்ப முடியுமா? ஆனால் நடந்திருக்கிறது.

பல மாணவிகள் திரைப்படம் சம்பந்தமான பாடங்களை பல்கலைக்கழகத்தில் படிக்க ஆரம்பித்துள்ளனர். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்று சேர்ந்து திரைப்படங்களை தயாரிக்கவும் தொடங்கியுள்ளனர். இந்த வகையில் 2006ம் ஆண்டு மாணவர் சேர்ந்து தயாரிக்கும் பல படங்கள் வெளிவரலாம். நடிப்பு மட்டுமன்றி மற்றைய துறையிலும் பெண்கள் கனடாவில் வளர்ச்சி காணத் தொடங்கியுள்ளனர்.

ரூபி யோகதாசன் நடிப்புத் துறையிலிருந்து திரைப்படத் தயாரிப்புக்குள் நுழைந்திருக்கிறார். தர்சினிக்கு டைரக்ஷன் துறைக்குள் நுழைய ஆர்வம் என்று பேசிக்கொள்கிறார்கள். பவதாரிணி (கனடா) இசையமைப்பில் ஏற்கெனவே நுழைந்து ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டு வருகிறார். சிறந்த குணசித்திர நடிகை என்று புகழப்படும் சாமந்தி, நடிப்புத் துறையில் இருந்து விலகி, தொலைக்காட்சித்துறையில் இயங்கி வருகின்ற அதே வேளை, டைரக்ஷன் துறையிலும் நாட்டம் காண்பிப்பதாக கூறப்படுகின்றது.

கலைவாணி ராஜகுமாரன் கதை, திரைக்கதை வசனத்துறையில் வெகுவிரைவில் நுழைந்து விடுவார் என நம்பிக்கையாக எதிர்பார்க்கலாம். சிவவதனி பிரபாகரன், கோதை அமுதன் போன்ற பிரபல எழுத்தாளர்கள் தற்போது சினிமாத்துறையில் ஈடுபடாவிட்டாலும் காலம் அவர்களையும் சினிமாவுக்குள் இழுந்து வரும் என்பதில் சந்தேகம் இல்லை. சுமதி ரூபன் குறுந் திரைப்படத்தில் ஏற்கெனவே புகழ்பெறத் தொடங்கிவிட்டார். திரைப்படத்துறை மேன்மேலும் வளர்ச்சிபெறத் தொடங்க, திரைத் துறைக்குள் பெண்களின் படையெடுப்பு மிக அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



வீனா :
என்ன அதிசயமாக பார்க்கிறீங்க. இது என்னோட நிஜ கூந்தல்தான்.



கல்பனா :
இப்படி அமைதியான பெண் கனடாவில் இருக்க முடியுமா?.



காந்தினி :
தலையில் 'பன்டானா' கட்டுவதே ஒரு அழகு.



## இது காதலா? தாலாட்டு பாடலா?

தயாரிப்பாளர்: டைரக்ரரு சார்! நடிப்பு சொல்லிக்கொடுத்தது போதுங்க. பெண்ணு நித்திரையாப் போச்சு

டைரக்டர் : அடுத்த பிறப்பில் டைரக்டராய் பிறந்தா மட்டும் போதாது. புரிஞ்சுக்கக்கூடிய தயாரிப்பாளர் வந்து அமையவேண்டும்:

நடிகை : சின்னவயசிலை டாடி நிலாவைக் காட்டி சாதம் ஊட்டி தூங்க வைச்சது மாதிரி இருந்தது. நீங்க நல்ல அப்பா.

# அனுஷா சிவலிங்கம்
## தென்னிந்திய கலைஞர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வளர்ந்து வரும் பாடகி



நிகழ்ச்சி ஒன்றில் தென்னிந்திய பாடகர் ஹரிஷ் ராகவேந்திராவுடன் கனேடிய தமிழ் பாடகி அனுஷா சிவலிங்கம்

தென்னிந்திய பாடகிகளுக்கு இணையாக, பாடலின் பாவங்களை குரலில் பிரதிபலிக்க செய்பவர் அனுஷா சிவலிங்கம். எந்தப் பாடலையும் எவர் முன்னிலையிலும் பாடமுடியும் என்ற துணிவு இவரிடம் இருக்கிறது. கனடாவில் பல இசைக்குழுக்களிலும் பாடி வருகிறார். இசையில் இவ்வளவு ஈடுபாடு இவருக்கு ஏற்பட்டதன் காரணம் தந்தையார் சிவலிங்கம், மற்றும் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் என்று சொல்கிறார் இவர்.

ஒரு கலைஞனுக்கு உள்ள பலம் பணிவு - நட்புணர்வு - விருந்தோம்பல் - இன்னொரு சக கலைஞனுக்கு கொடுக்கும் மரியாதை - தன் முன்னோடியான கலைஞர் மத்தியில் தன்னடக்கம். இவை எல்லாவற்றிலும் மேம்பட்டு நிற்பவர் அனுஷா. இவர் பாடிய பாடல்கள் கனடாத் தமிழ் திரைப்படங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன.. மேலும் பல பாடல்களுக்கான ஒலிப்பதிவுகளும் விரைவில் நடக்கவிருக்கிறது.



சுகம் சுகமே திரைப்படக்காட்சி ஆரம்ப விழாவில் தமிழ்ப்பிரமுகர் பொ.கனகசபாபதி அவர்களை வரவேற்கும் ஸ்ரீமுருகன்

# நல்ல மனம் வாழ்க



Jay, நடிகை வீனா, டைரக்டர் ரவி

## கனடா தமிழ் திரைப்படங்களுக்கு கைகொடுக்கும் "JAY"

**"யார் இந்த மனிதன?"**

இந்தக் கேள்வி ஒவ்வொரு கனடா தமிழ் திரைப்படத்தினை பார்த்த போதும் எழுந்திருக்கிறது. முன்வரிசையில் நின்று அதற்கான உதவிகளைச் செய்து, திரைப்படம் வெற்றி பெறவேண்டும் என்று மனதார நினைக்கும் ஒரு கனடிய தமிழ் சினிமா ஆர்வலர். பல படங்களிலும் சிறிய பாத்திரங்களில் இவர் தோன்றியும் இருக்கிறார்.

**"எப்படியும் நம்ம சினிமா இந்த மாதிரி வளர வேண்டும்"**

என்று நம்பிக்கைதர, தனது பக்கத்தில் உள்ளவரிடம் உரையாடிக் கொண்டிருந்த இவரைக் கண்டதுவும், தயாரிப்பாளர் ஸ்ரீமுருகனை அணுகி

**"யாருங்க இவர்"**

என்று கேட்டேன்.

**"இவர்தான் Jay Truck Training School உரிமையாளர். எங்களுடைய படங்கள் என்றால் இவருக்கு உயிர். நல்லதொரு கலைஞர். நல்லதொரு கலை ஆர்வலர். நல்லதொரு நண்பர். அறிமுகப்படுத்தி விடவா"**

என்று கேட்டார். அப்புறம் பேசிக்கலாம் என்று கூறிவிட்டு சென்றேன்.

வீட்டுக்கு வந்ததும் இவரைப் பற்றிய ஆராய்வினைத் தொடர்ந்தேன். நல்ல கடவுள் பக்தர். தமிழ் மொழி அபிமானி. கலைத்தாகம் கொண்டவர்.

எமது கனடாத் தமிழ் திரைப்படம் வளர்வதற்கு இவ்வாறான கலைத்தாகம் கொண்டவர்கள் நிச்சயம் அவசியம். எமது திரைப்படங்கள் என்றதுவும் தலையைத் திருப்பி நமட்டுச்சிரிப்பு கொள்ளும் நம்மவர் மத்தியில், நமது சிறப்புக்களை எடுத்துரைக்கும் இவர் பாராட்டுக்கும் மதிப்புக்கும் உரியவரே. இவர்போல ஒவ்வொருத்தருக்கும் நமது கலைத்துறையில் அன்பும், பக்தியும், ஆர்வமும், ஈடுபாடும் இருந்தால், கனேடிய தமிழ் திரைப்படத்துறையை நாம் உலக அரங்கில் உச்சிக்கு எடுத்துச்செல்லமுடியும். - (நிருபர்)



சுகம் சுகமே திரைப்படத்தில் ... கீதவாணி ராஜ்குமாருடன் ஸ்பானிய நடிகை மரியா

## வானொலி இயக்குனரும் ஒலிபரப்பாளரும் சினிமா நடிகருமாகிய நடா ராஜ்குமார்

# அரசியல் பிரவேசம்

*நுட்பமான அறிவும், சீரிய சிந்தனையும் கொண்ட நடா ஆர். ராஜ்குமார் அரசியலில் ஏற்கெனவே அறிமுகமாகியிருந்தாலும், வேரூன்றும் வகையில் பிரயத்தனங்கள் செய்ய முற்படவில்லை. இவரது சேவையின் மாண்பினை அறிந்த கலையுலக நண்பர்களின் அன்பான வேண்டுகோளையடுத்து, கனேடிய அரசியலில் ஸ்திரமாக பிரவேசிக்க இவர் தீர்மானித்த செய்தியை அறிந்த கனடா கலையுலகத்தினரும், வானொலி ரசிகர்களும் தமது வாழ்த்துக்களை இவருக்கு தெரிவித்துவருகின்றனர். தற்செயலாக இவரது ஜாதகத்தைப் பார்த்த சோதிடர் ஒருவர்,*

*"இவர் பெரிய ஆளப்பா.. அரசியல் வானில் நிச்சயம் பிரகாசிப்பார்"*

*என்று ஆரூடம் கூறியது மட்டுமன்றி, அது பிழைக்குமானால் தன் சோதிடத் தொழிலையே விட்டுவிடுவதாக கூறியிருக்கிறார். இது ஒருபுறம் இருக்க,*

*கனடாவில் உள்ள பல பிரமுகர்களும் இவருக்கு தமது ஆதரவினைத் தெரிவித்துவருகின்றனர். ஊடகங்கள் பலவும் வெளிப்படையாக இவரைப் பாராட்டி வருகின்றன. தமிழர்களை கனடாவில் பிரதிநிதிப்படுத்தும் பொதுமை இவரில் காணப்படுவதாக கூறப்படுகின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, நடா ராஜ்குமாரின் பிரகாசமான எதிர்காலத்தை உணரமுடிகிறது.*

## கனேடிய தமிழ் கவிஞர் மதிவேந்தன்



*மலரே மௌனமா என்னும் இசைத்தட்டில் இசையமைப்பாளர் கபிலேஷ்வரால் அறிமுகம் ஆக்கப்பட்டவர் கவிஞர் மதிவேந்தன். கனடாவில் வெளியாகும் திரைப்படங்களிலும் இவரின் பாடல்கள் பிரபல்யம் பெறத் தொடங்கியுள்ளன. கனடாவில் உள்ள இளைய கவிஞர்களில் மதிவேந்தனின் கவிதைகள் வித்தியாசமானவை. பழமைக்கு பழமையும் புதுமைக்கு புதுமையும் கொண்டதாய் இவரின் படைப்புகள் அமைந்துள்ளன.*

# வந்துட்டாங்கையா! வந்துட்டாங்கையா!

படத்தில் : உதயன் பொன்னுத்துரை



## கனடா சினிமாவுக்குள் திடுதிடுவென நுழைந்த வர்த்தகப் பிரமுகர்கள் !

**மேலும் பல வர்த்தகப் பிரமுகர்கள் திரைப்படம் நடிக்க தயார் நிலையில் உள்ளனராம். அடிச்சுதடா சுவீப்பு!**

'என்ன இப்படிப் பண்ணீட்டீங்க. வந்தீங்க. நடிச்சீங்க. ஒரேயடியாக அசத்தீட்டீங்க. எங்கே இருந்துங்க இந்தத் துணிவு வந்தது'

என்று உதயன் பொன்னுத்துரையை கேட்டோம்.

இவர் ஒரு வீடுவிற்பனை முகவர்.. இனியவர்கள் என்ற கனடிய தமிழ் திரைப்படத்தில் நடித்திருக்கிறார்.

'நான் எங்கே நடித்தேன்.. எல்லாம் லெனின்தான். அவர் சொன்னார். அதை நாங்கள் செய்தோம்.'

என்று புன்னகைத்தார் உதயன்.

தான் செய்யும் தொழில் சம்பந்தமான பாத்திரமாக இருந்தாலும் அதை திரையில் ஒப்புவிக்கும் போது சலனம் இல்லாமல் இருப்பது லேசுப்பட்ட காரியம் இல்லை. திரைப்பட அனுபவம் கொண்டவர் போல உதயன் பொன் னுத்துரை இனியவர்கள் என்ற திரைப்படத்தில் நடித்தமைக்கு ஒரு 'சபாஷ் ' போடலாம்.

'போகிற போக்கைப் பார்த்தால் அடுத்தபடத்தில் கீரோவாக நடிப்பீங்க போல இருக்கு. அப்படி ஏதாவது எண்ணங்கள்....'

சிரித்தார். அந்த சிரிப்பில் அவருக்கும் ஊள்ளூர ஆசை இருக்கிறது போல தெரிகிறது.

எவரையும் நடிக்க வைக்க முடியும் என்று களத்தில் நுழைத்த டைரக்டர் தம்பி லெனினிடம் இது பற்றி கேட்டபோது,

'நடிக்க முடியும் என்று எவனொருவன் நம்புகிறானோ, அவனால் நிச்சயம் நடிக்க முடியும். அந்த நம்பிக்கையை ஊட்டவேண்டும். அப்போது நடிப்பு தானாக வந்துவிடும். ஒரு டைரக்டரின் வேலை அதுதானே. அதைத்தான் செய்திருக்கிறேன்'

இவ்வாறு பவ்வியமாக பதில் அளித்த இந்த இளைஞர் லெனின், எதிர்காலத்தில் திரைத்துறையில் சாதனை புரியத்தான் போகிறார். இனியவர்கள் திரைப்படத்தில் உதயன் பொன்னுத்துரையுடன் நீலம் சில்க் உரிமையாளர், புகைப்படப்பிடிப்பாளர் சுகந்தன், மற்றும் திருமண மண்டப உரிமையாளர் போன்று பலரகப்பட்ட வர்த்தகப் பிரமுகர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார் இயக்குனர் லெனின் எம். சிவம்.



# கலை உலகில் ஒற்றுமைகள்




சிவாஜி கணேசன் சிவாஜி மகேந்திரா

தமிழ்திரையுலகில் என்றும் எவரும் அடையமுடியாத அளவுக்கு உயர்ந்த நிலையில் இருப்பவர் செவாலியர். நடிகர்திலகம் சிவாஜிகணேசன். இவரின் நடிப்பு ஏதோ ஒருவகையில் இன்றைய கலைஞர்களில் பிரதிபலிக்கின்றது என்பது நிதர்சனமான உண்மை. அவரின் நடிப்பில் மயங்கி, தன்னையே ஒரு சிவாஜிகணேசனாக மாற்றிக்கொள்ள எண்ணங்கொண்ட மொன்றியால் சிவாஜி மகேந்திரா, பல சந்தர்ப்பங்களில் சிவாஜியின் நடிப்பினை அப்படியே ஒப்புவித்திருக்கிறார். நடிப்பது ஒரு திறமை என்றால், இன்னொருவரின் நடிப்பினை அப்படியே கிரகித்துச் செய்வதும் திறமைதான். சிவாஜி கணேசனின் பல பாடல்களுக்கும் காட்சிகளுக்கும் மேடையிலும், சின்னத்திரையிலும் மெருகேற்றும் சிவாஜி மகேந்திரா எதிர்காலங்களில் சினிமாவிலும் தோன்றவிருக்கிறார்.




ரேவதி சாமந்தி

துடுக்குத்தனமான நடிப்பு - எதையுமே முகபாவங்களில் காட்டும் துறுதுறுப்பு. இந்த இரண்டு விடயங்களையும் வைத்துக்கொண்டு ஒரு நடிகையை கற்பனை பண்ணினால் அது ரேவதியாக இருக்கும் அல்லது சாமந்தியாக இருக்கும். ரேவதிக்கு அன்று கிடைத்த திரைச் சந்தர்ப்பங்கள் சாமந்திக்கு கிடைத்திருந்தால் ரேவதியை மிஞ்சும் வகையில் சாமந்தி செய்திருக் கக்கூடும். கனவுகள் திரைப்படத்தில் சாமந்தியின் நடிப்பினைக் கண்டு, கனடாத் தமிழ் திரைப்பட ரசிகர்கள் அசந்துவிட்டனர். வில்லத்தனமான ஒரு குடும்ப கதாபாத்திரத்தை, எந்தவொரு சலசலப்பும் இல்லாமல் செய்து முடித்திருந்தார் சாமந்தி. கதிரொளியில் அமைந்த இன்னொரு கதாபாத்திரமும் அவ்வாறேதான். இவ்வளவு திறமையுள்ள நடிகைக்கு தனித்துவத்தைப் பேணும் கதாபாத்திரங்கள் கிடைக்க முன்னரே, அவர் திரையுலகத்தில் இருந்து விலகியி ருப்பது துரதிஷ்டம்.




என்.எஸ்.கே எஸ்.கே.தீசன்

நகைச்சுவையினால் நல்ல கருத்துக்களை விதைத்து நாட்டைத் திருத்தவேண்டும் என்று புறப்பட்டவர் என.எஸ்.கிருஷ்ணன். அவர் நினைத்தது போன்று நல்ல கருத்துக்களை விதைத்தார். நடித்தார். பாடினார். நவீன பாணியில் கதாப்பிரசங்கம் செய்தார். ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. அதே வகையில் தனது பணியினை பல்வேறு வடிவங்களில் செய்து வருபவர் எஸ்.கே.தீசன். பத்திரிகை நடத்தினார். பத்திரிகை களில் எழுதிவருகிறார். புதிய கருத்துக்களுடன் கதாப்பிரசங்கம் செய்கிறார். நாடகங்கள் நடித் தார். திரைப்படத்தில் நடித்தார். இவ்வாறாக சமூ கத்தின் இன்றைய தேவைகளை உணர்ந்து, அதில் உள்ள நெளிவுகளை நிமிர்த்த கனடாவில் அமைதியாக இருந்து தன் பணியை செவ்வனே செய்யும் எஸ்.கே.தீசனுக்கு வாழ்த்துக்கள்.

# சுகம் சுகமே திரைப்படத்தில் தன்னை மறந்து நடித்த கனடிய கலைத்திலகம் ஸ்ரீமுருகன்



கலையுலகில் எதையாவது சாதிக்கவேண்டும் என்ற ஆர்வம் உடைய ஸ்ரீமுருகனின் அண்மைக்கால முன்னெடுப்புக்கள் கனடா திரையுலக வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக அமைந்திருக்கின்றன. திரைப்படங்களில் நடிப்பது மட்டும் அல்லாமல், அவற்றினை சந்தைப்படுத்த உரிய மார்க்கங்களையும் கூறி, அந்தப் பணியில் தன்னையும் இணைத்துக்கொள்கிறார். மேலும் பல திரைப்படங்களை உருவாக்க முயற்சிகள் செய்தும் வருகிறார். கனடாத் தமிழ்திரைப்பட துறை உருவாகுவதற்கு அல்லும் பகலும் உழைத்தவரும் இவரே. கனடா தமிழ் திரைப்பட சங்க தலைமைக்கு இவரது பெயரே பேசப்படுகின்றது.

# குருநகர் மணிமாறன் (டக்லஸ்)



'டக்லஸ்' என்றால் கனடாவில் தமிழ் திரையுலகில் அனைவருக்கும் தெரியும். பல கதாபாத்திரங்களில் நடித்திருக்கும் இவருக்கு இன்னும் கதாநாயகனாக நடிக்கும் சந்தர்ப்பம் அமையவில்லை. கனடாவில் உள்ள தயாரிப்பாளர்களும், டைரக்டர்களும் தங்களுக்கு என்று சிலரை வைத்துக்கொண்டு அவர்களையே கதாநாயகனாக்கும் தன்மை கொண்டவராய் உள்ளனர்.

"டக்லஸ்.... " - இப்படி அழைப்பதை இவர் விரும்புவதில்லை. குருநகர் மணிமாறன் என்று சொல்லுங்கள் என்பார்.

"என்னப்பா.. ஜேம்ஸ்பொன்ட் மாதிரி எல்லாம் படங்களில் நடிக்கிறீங்க... இப்ப வேலி படத்திலை நல்லதொரு வில்லனாக வாறீங்களாம்.. திடீரென்று எப்படீங்க... என்ன சமாச்சாரம்"

என்று கேட்டேன். வாசகர்கள் குறைநினைக்க வேண்டாம். சதாரணமாகவே நான் இப்படித்தான் எல்லோருடனும் பேசுவேன்.

"அண்ணை, நீங்கதான் சினித்திரன் ஆசிரியரோ, பத்திரிகை பார்த்தேன். நல்லா இருக்குது... நான் பராசக்தி படத்தில் வாற ஒரு வசனத்தை நடிச்சுக்காட்டவோ"

என்று சொல்லிக்கொண்டு தொடங்கினார். உண்மையாக சிவாஜி ஆகவே மாறிவிட்டார். எந்தவொரு பார்த்திரத்திலும் சொன்னவுடன் தன்னை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் இவரிடம் இருக்கிறது.

'என்னடாப்பா... இப்படியெல்லாம் திறமைமிக்க கலைஞர்களை வைச்சுக்கொண்டு, நம்ம திரைப் படத்துறையை இன்னமும் உசத்தேலாம கிடக்கிற தென்றால்.. கனடாவில் உள்ள இயக்குனர்கள் தயாரிப்பாளர் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வருகி றது' என்று சொல்ல நினைத்தேன். ஆனால் சொல்ல வில்லை.

"உனக்கு ஏலுமெண்டா வந்து ஒரு படம் எடுத்துக்காட்டு பாப்பம். சும்மா உங்கடை எழுத்து விண்ணத்தனத்தை காட்டேதேங்கோ" என்று கனடா சினி பிரபலங்கள் என்னை திட்டும் என்று எனக்கு தெரியும்தானே! குருநகர் மணிமாறனிடம் இந்தக் கேள்வியை கேட்டேன்.

"என்னண்ணை, சும்மா இருக்கிற என்னைக் கொண்டுபோய் மாட்டிவிடப்பாக்கிறீங்க"

என்று சொன்னார் டக்லஸ்... (மன்னிக்கவும் அவர் பெயர் குருநகர் மணிமாறன்)

கனடாவில் திரைப்படத்துறையில் உள்ள அனைத்து விடயங்கள் பற்றியும் இவர் அறிந்து வைத்திருக்கிறார். எல்லோருடனும் எப்படிப் பழகுவது என்று புரிந்து வைத்திருக்கிறார்.

இது இவரின் பிளஸ் பொயின்ட்(சகக் குத்து).

தமிழிச்சியில் இவரின் நடிப்பு பற்றி புகழாதவர் இல்லை. சுகம் சுகமே படத்தில் சிறிய காட்சி ஒன்றில் தோன்றினாலும், விறுவிறுப்புடன் துப்பறி யும் பாத்திரத்தில் நடித்திருந்தார். மெதுவாக உன்னைத்தொட்டு படத்தில், இந்தியாவில் ஏஜன்டாக நடித்த பாத்திரம், மறக்க கூடியதா... என்ன!

"விடுதலை உணர்வினைத் தரும் நாடகங்களில் நடிப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன். நடிப்புத்துறைக்கு அதற்காகத்தான் வந்தேன்"

என்று இவர் கூறியபோது மொழியிலும், இனத்திலும் இவர் கொண்ட பாசம் புரிகின்றது.

அவர் திறமைக்கு உலகத் திரையுலகம் தலை வணங்குகிறது.

# கனடிய திரைவானில் குண சித்திரங்கள்



தாரணி, குறமகள்



அம்பலவாணர் கேதீஸ்வரன்



குயின்டஸ் துரைசிங்கம்

அநேக திரைப்படங்களில் நடித்திருக்காவிடினும், குறமகள் வள்ளிநாயகி ராமலிங்கம் அவர்களின் நடிப்பு கனடாத் திரைப்படத்துறையில் நிலைத்திருக்கிறது. அதேபோலத்தான் தாரணி. தங்களின் குணசித்திர நடிப்பினால் பலரையும் கொள்ளை கொண்ட இவர்கள், மேலும் தம் திறமைகளைக்காட்ட அந்த நாட்களில் (5 வருடத்தின் முன்) போதிய சந்தர்ப்பம் இருக்கவில்லை. கனடாவில் திரைப்படத்துறை வளர்ச்சியில் இவர்களின் பங்களிப்புக்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

நாடகத்துறையிலும் திரைப்படத்துறையிலும் மிகுந்த ஆர்வம் உடையவர் அம்பலவாணர் கேதீஸ்வரன். 'மெதுவாக உன்னைத் தொட்டு' என்னும் படத்தில் முதன் முதலாக இவர் நடித்திருந்த போதும் மிக நேர்த்தியாக இயல்பாகவே தனது பாத்திரத்தை அதில் செய்திருந்தார். குயின்ரஸ் துரைசிங்கம் கலைத்துறையின் சகல துறைகளிலும் கால்பதித்திருப்பவர். பல படங்களில் சிறிய வேடங்களில் நடித்திருந்த இவர், அண்மையில் சுகம்சுகமே படத்தில் நல்லதொரு கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

இவ்வாறான குணசித்திர நடிகர்களை பொருத்தமான பாத்திரங்களில் நடிக்கவைக்கவேண்டியது கனடாத் திரைப்படத் துறையின் பொறுப்பு.

மதிவாசனின் வேலி திரைப்படத்தின் வெற்றிக்கு சினித்திரனின் வாழ்த்துக்கள்:

# எதிர்பாருங்கள்...
# மதிவாசனின் வேலி



ஒரு பெண்ணின் மனம் மாறுவது எப்படி? அன்பும் பண்பும் நாகரீகத்தில் தம் அடையாளங்களை இழந்துகொள்வது எப்படி?

இதையெல்லாம் தடுத்து நிற்கும் வேலி எது?

நம் வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை குடும்பக் காவியமாக உருவாக்கியிருக்கிறார் மதிவாசன்..



திரைக்கதை, வசனம் : குரு அரவிந்தன் கமரா : சித்து இசை: பவதாரிணி இயக்கம் : மதிவாசன்

# டைரக்டர் துரத்தப்பட்டார் ! நடிக்க வந்த 84 வயது மூதாட்டி இயக்குனர் ஆனார்! திகில் மிக்க சம்பவம்!



## கனேடியன் திரைப்படத்தில் கலாட்டா



தில்லா துரைசிங்கம்

குருநகர் மணிமாறனின் டைரக்ஷனில் திரைப்படம் ஒன்று ரொறன்ரோவில் உருவாகிக்கொண்டிருந்தது. அதில் பிரபா கதாநாயகனாக நடித்துக் கொண்டிருக்க, அங்கு நின்றிருந்த தில்லா துரைசிங்கம் குழம்பியதால் வந்த பிரச்சனை இது. தில்லா துரைசிங்கம் என்பவர் 84 வயதுமிக்க மூதாட்டி. பிரபல நடிகர் ரமேஷ் புரட்சிதாசனின் பேத்தியார். அண்மையில் பல நகைச்சுவை நாடகங்களில் நடித்துப் புகழ் அடைந்தவர். இந்தச் சம்பவத்தால் திரைப்படக் குழுவினர் அல்லோலகல்லோலப்பட்டனர்.

இவ்வாறான காட்சி ஒன்று கணபதி ரவீந்திரனின் "கனேடியன்" முழுநீள நகைச்சுவைத் திரைப்படத்துக்காக எடுக்கப்பட்டது. புதுவித நகைச்சுவைகளை அள்ளித் தெளித்திருக்கிறார் ரவிஅச்சுதன்.



தரன்

கனேடியர்கள் போல மாறி, நாகரீகம் என்று நினைத்து பைத்தியக்காரத்தனமாக வாழும் இளைஞர்களை திருத்த, இலங்கையில் இருந்து வந்த பெரியவர், புதுவித ஐடியா ஒன்றினை செயற்படுத்துகிறார். அந்த இளைஞர்களைவிட தான் 'இன்னும்' நாகரீகமான கனேடியனாக மாறுகிறார். இவரின் அட்டகாசம் தாங்கமுடியாமல் எல்லாரும் திக்குமுக்காட, கதை திருப்பம் அடைகிறது. பெரியவர் நினைத்த காரியம் வெற்றியடைந்ததா? இளைஞர்கள் திருந்தினார்களா? பிள்ளையார் பிடிக்க குரங்காய் போனதா?

இதற்கான பதிலுடன் விரைவில் திரைக்கு வருகிறது கணபதி ரவீந்திரனின் கனேடியன். படத்தின் கதையையும் திரைக்கதையையும் ஏற்றிருக்கிறார் "மெதுவாக உன்னைத் தொட்டு" புகழ் அருண். வரிக்கு வரி நகைச்சுவை பொங்கி வழிகின்றது. கமரா, டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றிருப்பவர் ரவி அச்சுதன். தலைகால் புரியாமல் திரியும் இளைஞர்களாக சஞ்சீவ், சுதன், தரன், மைக்கல் ஜக்சன் நடிக்க, இவர்களைத் திருத்த வரும் கதாபாத்திரத்தில் கணபதி ரவீந்திரன் நடிக்கிறார். படத்தில் சுரேஷ்ராஜா, சிந்து, காந்தினி, குருநகர் மணிமாறன் (டக்லஸ்) மற்றும் பலர் நடிக்கின்றனர். சமீப காலமாக, கனேடிய தமிழ் திரைப்பட உலகில் பேசப்படும் திரைப்படம் இதுவாகும். இந்தப் படத்தில் அறிமுகமாகியுள்ள சிந்து, காந்தினி போன்றவர்கள் பாடல் காட்சிகளில் மிகவும் அற்புதமாக நடித்திருக்கின்றனர். ட்ரெயிலர் ஆக காட்டப்பட்ட படப்பாடலைப் பார்த்த இளைஞர்கள் பெருமூச்சுவிடும் வகையில் ரவி அச்சுதன் கமாராவை கையாண்டுள்ளார். மெதுவாக உன்னைத் தொட்டு படத்தின் பின்னர் ரவி அச்சுதன் என்றால், படத்தில் ஏதாவது எதிர்பார்க்கும் கட்டங்கள் ("குளுமையாக") இருக்கும் என இளைஞர் முதல் பெரியோர் வரை ஒரு நம்பிக்கை வைத்துள்ளனர். நம்பிக்கை நிறைவேறுமா! கணபதி ரவீந்திரனின் நல்ல மனத்துக்கு படம் பெருவெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**கவிஞர் சேரன்**
இந்தக் கவிஞனின் எண்ணக்குவியில் இல்லாத ஏதும் உண்டா?

## கே.எஸ்.பாலச்சந்திரன் நடித்த ஆங்கில திரைப்படம் மீண்டும் கனடாவில் திரையிடப்படலாம்?



ஒருகாலத்தில் நாடகங்கள், திரைப் படங்களில் புகழ்ஏணியில் ஏறியவர் கே.எஸ்.பாலச்சந்திரன். அவர் நடித்த ஆங்கிலத் திரைப்படம் ஒன்று பல ஆண்டுகளின் முன்னர் வெளிவந்தது. அந்தப் படத்தில் இவரது நடிப்பினை பலரும் பாராட்டியிருந்தனர். இந்த திரைப்படத்தினை கனடாவில் திரையிடும் உரிமையினைப் பெற முயற்சிகள் நடக்கிறது. கனடாவில் திரைப்படத்துறை உருவாகி இருக்கும் இந்த நேரத்தில், இப்படம் திரையிடப் படுவது பொருத்த மானதே. Blendings என்னும் இந்தத் திரைப்படத்தினை கனேடிய தொலைக் காட்சியிலும் கொண்டுவர திரைப்பட அபிமானிகள் எத்தனம் செய்கிறார்கள். இம்முயற்சி 2006ம் ஆண்டு கைகூடலாம்.

# கலகலப்பும் கருத்தும் கலந்ததோர் கவிதை பாடும் கரு கந்தையா



## ஒரு பாடல் பிறந்த கதை

அன்றைய காலத்தில் எங்கள் ஊரிலிருந்து செல்லச்சன்னிதிக்கு செல்வோம். அந்த நினைவுகளை மீண்டும் ஒருமுறை வரவழைக்கும்படி ஒரு பாடல் செய்தால் எப்படியிருக்கும் என்று நினைத்தேன். பாடலையும் எழுதியாயிற்று. "விழித்தெழுந்து விநாயகரை" என்ற பாடல்தான் அது... பாடல் தயார்... சரி. யார் பாடுவது?

இதை நினைத்துக்கொண்டே வாகனத்தை ஓடிக்கொண்டிருந்தேன். எம்முடன் இருந்த கரு கந்தையா பாடலை வாங்கி வாசித்துவிட்டு தன்குரலில் படித்துக்காட்ட.... என்னால் நம்ப முடியவில்லை.. நான் எதிர்பார்த்த அதே பாணி.. அதே பாவம்.. அதே மெட்டு..

"கரு, நீ தான் அந்தப் பாடலைப் பாடுகிறாய்" என்றேன். பாடல் ஸ்ரூடியோவில் ஒலிப்பதிவாகிவிட்டது. நான் அப்போது வரசித்தி விநாயகர் கோவிலில் நின்றுகொண்டிருக்கிறேன்.. செல்போன் அடிக்கின்றது.

"ஹலோ" என்றேன்.... செல்போனில் பாடல் வருகின்றது.. "விழித்தெழுந்து விநாயகரை...". திரும்பிப் பார்த்தேன். வரசித்தி விநாயகரின் திருவுருவம் தெரிந்தது.

"உடம்பெல்லாம் புல்லரித்தது"

இப்படியாக கலகலப்பு திரைப்பட தயாரிப்பாளரும் நகைச்சுவை நடிகருமான எஸ்கே.தீசன் குறிப்பிட்டார்.

# திரைப்பட முன்னோட்டம் வேலி

"பெண்கள் குடும்பத்தின் கண்கள்". "பெண்ணின் மனத்தின் ஆழத்தை அறியமுடியாது" . "ஒரு பெண் நினைத்தால் எதையும் செய்து முடிப்பாள்". "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே"

இப்படி எல்லாம் பழமொழிகளை சொல்லி வைத்து பெண் என்றால் ஒரு புரியாத புதிராக்கி வைத்துவிட்டனர் நம் முன்னோர். அந்தப் பெண்ணின் மன ஆழத்தினை அளக்க முற்பட்டிருக்கிறார் இயக்குனர் மதிவாசன். அந்தப் பெண்ணுக்குள் ஏற்படும் மனப் போராட்டத்தினையும் அதில் உள்ள நியாய அநியாயங்களையும் சீண்டிப்பார்க்கும் மதிவாசன், ஆண்வர்க்கத்தின் ஒரு அம்சமாக அதை அவதானிக்காமல் மனிதாபிமானத்துடனும் கலாச்சாரத் தேவையுடனும் நோட்டம் போட்டு, பெண்ணின் வேலி என்னவென்று கூற முற்படுகிறார்.

கனடாவில் உள்ள நடைமுறை வாழ்வு படத்தில் தெளிவாக காட்டப்படகின்றது. தனது திரைக்கதை வசனத்தின்மூலம், நல்ல பல கருத்துக்களை தந்திருக்கும் கதாசிரியர் குரு அரவிந்தன், சில இடங்களில் தனது எழுத்தாற்றலின் முத்திரைகளைப் பதிக்கத் தவறவில்லை. கதையின் கருப்பொருள் எந்த வகையிலும் பிறளாத வகையில் மிகஅருமையாக இந்தப் படத்தை மதிவாசன் இயக்கிய விதமே அருமை. ஸ்ரீமுருகன் வழமைபோல தனது நடிப்பாற்றலினால் திரைப்படத்தில் அப்ளாஸ் பெறுவார் என்பது நிச்சயம். பவதாரணியின் இசையமைப்பு மிக அருமையாக உள்ளது. சித்து கமாராவில் பல சித்து விளையாட்டுக்களை செய்துதான் இருக்கிறார்.

ஆக, இந்தப் படம் கதை அம்சத்துடன் நகரும் முதலாவது கனடா தமிழ் திரைப்படம் என்ற பெயரைத் தட்டிக்கொள்ளலாம்.



பிரதான வேடங்களில் மதிவாசனும் தர்ஷினியும் நடிக்கிறார்கள். பல நாடகங்கள் திரைப்படங்களில் நடித்த அனுபவம் உடையவர்கள் இவர்கள். நாடகங்களை இயக்கிய அனுபவமும் இவர்களுக்கு உண்டு. அது மட்டுமல்லாமல் வித்தியாசமான பல திரைப்படக் கருவிகளை வைத்திருக்கும் ஒரு தயாரிப்பாளர் இவர் என்று கனடா தமிழ் சினிமா உலகில் பேசிக்கொள்கின்றனர். இவை அனைத்தும் ஒன்றாய் சேரும் போது, நல்லதொரு கலைப்படைப்பு நமக்காக உருவாகியிருக்கிறது என்பது சொல்லாமலே தெரிகின்றது. இந்தக் கலைப்படைப்பை மக்கள் மத்தியில் எப்படி ஜனரஞ்சகமாக்கி சந்தைப் படுத்தப்போகிறார் என்பதே இவருக்கு இருக்கும் பெரிய சவால்! இசை நிகழ்ச்சிக்கு பயன்படுத்திய டெக்னிக் திரைப்படத்துக்கும் நீண்ட காலத்துக்கு பொருந்தி வருமா?

# கேளாக் கேள்விகள்

*கனடாவில் தமிழர்களின் குறுந்திரைப்பட விழாவின் தேர்வுக் குழுவில், திரைப்படம் சம்பந்தப்பட்ட எவரும் நியமிக்கப்படவில்லையே... இது நியாயமா?*

உங்களின் ஆதங்கத்தில் அர்த்தம் இருக்கிறது என்பது உண்மை. திரைப்படம் சம்பந்தப்பட்ட தமிழர்களை தேர்வுக்குழுவில் சேர்க்கும் போது, பக்கச் சார்புக்கு அதிக வாய்ப்பு உண்டு. கனடாவில் குறுந்திரைப்படம் எடுப்பவரும், முழுநீள திரைப்படம் எடுப்பவரும் ஏதோ வகையில் அதிகம் தொடர்பு கொண்டவர்கள். போட்டி, பொறாமை, நட்பு, அபிமானம், காழ்ப்பு எதுவாகவும் இருக்கலாம். ஆகவே இவர்களை தேர்வுக் குழுவில் அனுமதிப்பது பொருத்தமானது அல்ல. வேறு இனத்தில் இருந்து துறைசார் வல்லுனர்களை அமர்த்தினால், அதற்கு அவர்களுக்கு கொடுக்வேண்டிய பணம், ஏற்பாடுகள் போன்றனவற்றை கருத்தில் கொண்டு குறுந்திரைப்பட ஏற்பாட்டாளர்கள் சினிமா பற்றிய அறிவு கொண்டவர்களை (சினிமாவுடன் சம்பந்தப்படாதவர்களை) தேர்வுக்குழுவில் அமர்த்தியிருக்கயிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். அவங்க அவங்க பிரச்சனை அவங்களுக்குத்தான் தெரியும். எனினும் எதிர்காலங்களில் இதுபற்றி குறுந்திரைப்பட அமைப்பாளர் (ரதன்) சற்று கவனம் எடுப்பார் என்று நம்புவோம்.

*இனியவர்கள் திரைப்படம் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்களை பலரும் தெரிவிக்கின்றனர். உங்கள் கருத்தையும் சொல்லுங்களேன்....?*

இளைஞர்களின் பிரயாசம் புரிந்தது. அவர்கள் எடுத்திருக்கும் முயற்சிகளில் அக்கறை வெளிப்பட்டது. திரைப்படத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு தெரிந்தது. நாளையை நோக்கிய இவர்களின் நம்பிக்கை புரிந்தது.... திரைப்படத்தை திரையில் காட்ட முன்னர், உண்மையான விமர்சனங்களை தரக்கூடியவர்களை அழைத்து வந்து அலசி ஆராய்ந்து சேர்க்க வேண்டியதை சேர்த்து, விலக்க வேண்டியதை விலக்கியிருந்தால் முதல் படத்திலேயே இவர்கள் முழுமை பெற்றிருக்கலாம் என்று எனக்குத் தோன்றுவது சரிதானா! ஆனால் எந்தவொரு அனுபவமும் இல்லாமல் முதல் படத்திலேயே பல விடயங்களில் இவர்களின் நேர்த்தியான அணுகுமுறையை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும்.

*சில குறிப்பிட்டவர்களின் திரைப் படங்கள் பற்றிய செய்திகளும் படங்களுமே சினித்திரன் இதழில் காணப்படுகிறது. நீங்களும் பக்கச் சார்புதானா?*

என்னங்க.. நீங்களே இப்படிக் கேட்டிருக்கக்கூடாது! எல்லோரையும் அன்போடுதான் கேட்டேனுங்க. சம்பந்தப்பட்டவர்கள் படங்களையும் செய்தியையும் தந்தால்தானே நாம் பிரசுரிக்கமுடியும். அவங்க தர விரும்பாமைக்கு காரணம் எனக்கு எப்படிங்க தெரியும்! சிலவேளை திரைப்படங்கள் பற்றி எழுதி நான் ஏதோ சம்பாதிப்பதாக அவர்கள் தப்பாக நினைத்திருக்கலாம்.... அல்லது புதுமுகம் ஒன்று கனடாத் திரைப்படத்துறைக்குள் நுழைகிறதே ... இதை அனுமதிக்கலாகாது என்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

அவர்களின் இதயக் கதவுகள் திறக்கும் வரை காத்திருப்போம். கனடாத் திரைப்படங்களுக்கு பத்திரிகைகள் ஊக்கம் கொடுப்பதில்லை என்று சொல்லும் கனடாத் தமிழ் திரைப்படக் கலைஞர்கள் சிலர், நமது சஞ்சிகைக்காக "கெஞ்சோ கெஞ்சென்று" கெஞ்சியும் விபரங்கள் தர விரும்பவில்லை என்றால், logicல் என்னமோ ஒன்று miss ஆகிறது அல்லவா!

**பதில் : கிருஷ்ணா**

# நன்றியும் வாழ்த்தும் கூறி சினித்திரன் விடைபெறுகிறான்!

*சினித்திரன் ஆரம்பித்தபோது ஆசிரியர் தலையங்கத்தில் எமது நோக்கம் பற்றி எழுதியிருந்தோம். கனடாவில் தமிழ் சினிமா வளர ஊடகங்கள் எதுவும் முயற்சி எடுக்காமையினால்தான் நாம் இந்த சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தோம். ஊடகங்களுக்கு ஒரு உந்துசக்தியை வரவழைக்க வேண்டும் என்று விரும்பினோம். எமது எண்ணம் ஈடேறியுள்ளது.*

*திரு.கணபதி ரவீந்திரன் அவர்கள் கதிரொளி என்னும் சினிமா சஞ்சிகையை இம்மாதம் முதல் வெளிக்கொணர்கிறார். பல்துறைக் கலைஞரான அவர் இப்பணியைச் சிறப்பாகச் செய்வார் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது. அதே போல திரு. கே.பி.நாத் அவர்களும் சினிமா சஞ்சிகை ஒன்றினை வெளிக்கொணர்கிறார். இருவரும் சினிமா தயாரிப்பாளர்கள். சினிமா தொடர்பு அதிகம் உள்ளவர்கள். அவர்களால் கனடாத் தமிழ்திரைப்படத்துறைக்கு நல்லதொரு உந்து சக்தியை தரமுடியும்.*

*கனடாவில் பல சஞ்சிகைகள் சினிமாவுக்கு வந்தால் போட்டிகள் பொறாமைகள் ஏற்பட்டு நம் திரைப்படத்துறை நலிந்துவிடும்.*

*எம்நோக்கம் நிறைவேறியிருக்கிறது. திரு. கணபதி ரவீந்திரன் அவர்களுக்கும், திரு. கே.பி.நாத் அவர்களுக்கும் நன்றியும் வாழ்த்தும் கூறி சினித்திரன் விடைபெறுகிறான்.. எமக்கு தந்த ஆதரவினை இவ்விருவருக்கும் கொடுத்து நம் திரைப்படத்துறையினை வளர்ப்பீர்!*

**இவர்களும் நம் சினிமாத்துறையை கைவிட்டால் சினித்திரன் பொறுத்திருக்கப் போவதில்லை... மீண்டும் திரும்பி வருவான்.**

*நன்றி.*
*அன்புடன்*
*கிருஸ்ணா சிவப்பிரகாசம்*
*"சினித்திரன்" ஆசிரியர்.*



காதல் வானிலே திரைப்படத்தில் ரமேஷ், சத்தியவரதன், செந்தில்நாதன், கமல்பாரதி

# 'பரா' வின் தயாரிப்பில் மற்று மோர் திரைப்படம் உருவாகலாம்

'மெதுவாக உன்னைத் தொட்டு' பட தயாரிப்பாளர் பரா அவர்கள் மற்று மொரு திரைப்படத்தினை தயாரிக் கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அறியப்படுகின்றது. அந்தத் தயாரிப பினை, தென்னிந்திய நடிகர்களை வைத்து தயாரிக்கவுள்ளார் என்று சில செய்திகளும், கனடாவில் தயா ரிக்கவுள்ளார் என்று சில செய்திக ளும் கூறுகின்றன. இவர் தொழில் சம்பந்தமாக இந்தியா சென்றிருப் பதால் இது பற்றி ஊர்ஜிதம் செய்துகொள்ள முடியவில்லை. தரமான படம் தயாரிப்பதே தன் இலட்சியம் என்கிறார் இவர்.



தயாரிப்பாளர்
பரா பரராஜசிங்கம்

*கனடாத் தமிழ் திரைப்படத்துறையை உயர்த்துவதற்கு சக்தியுள்ள யாராவது இருக்கிறார்கள் எனநினைக்கிறீர்களா?*

திரைப்படக் கலைஞர்கள் சகலருக்கும் இந்த சக்தி இருக்கிறது. திரைக்கலை ஞர்களுக்கு வெளியே உள்ள சிலருக் கும் அந்த சக்தி உண்டு. அதாவது ஒதுங்கியிருக்கும் சிலரும் திரைப்படத் துறையில் தம் பங்களிப்பை தர முன்வர வேண்டும். உதாரணமாக... பி. விக் னேஸ்வரன், இளையபாரதி... எம். பி. கோணேஷ்... சேரன்... போன்ற பலர். அதே போல தற்போது கைகொடுக்கும் பிரமுகர்கள் தம் பங்களிப்பை உயர்த்த வேண்டும்.. உதாரணமாக... பரா பரராஜசிங்கம், நடா ராஜ்குமார், வைரமுத்து சொர்ணலிங்கம், ரிவிஜ தொலைக்காட்சி, வீடியோ மாருதி தொலைக்காட்சி, கலாதரன் போன் றவர்கள் ஆக, இது தனியொருவரின் கையில் உள்ள விடயம் அல்ல. ஒரு குழும மனஒன்றிப்பு தேவை.

*"சகா" நல்லதொரு படமாக இருப் பினும், இரண்டாவது தரம் ஸ்காப ரோவில் திரையிடப்பட்டபோது வெற்றி யளிக்கவில்லையே.. ஏன்?*

திவ்வியராஜன் சந்தைப் படுத்துதலில் தன் திறமையைக் காட்டவில்லை. கனடாவில் பல தயாரிப்பாளரும் படம் எடுத்துவிட்டால் மட்டும் போதும் என்று நினைக்கிறார்கள். படம் எடுப்பது "இவரும் படம் எடுத்தார்" என்னும் பெயருக்காக அல்ல. மக்களிடம் அது போய் சேரவேண்டும் என்றும், எப்படிச் சேர்ப்பிப்பது என்று தயாரிப்பாளர், இயக்குனர்கள் சிந்திக்கவேண்டும். அதற்கு அமைவான வகையில் செயற் படவேண்டும். ஊடகங்களை (உரிய முறையில்) பயன்படுத்தவேண்டும். திரைப் பட விநியோகம், சந்தைப்படுத்தல் முறைகளில் இங்குள்ள திரைப்பட கலைஞர்களுக்கு சரியான திசை புரிய வில்லை. அது பற்றி துறைசார் விற்பனர்கள் சமூகவாதிகளுடன் ஆலோசனை செய்யவேண்டும்.

*மிகக்குறைந்த செலவிலே பல ஆண்டு களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட தென்னிந்திய திரைப்படங்களைக்கூட நெருங்க முடியாத நிலையில் கனடா தமிழ் திரைப்படத்துறை இருப்பதற்கு முக்கிய காரணம் என்ன?*

கனடாத் தமிழ் திரைப்படக்காரர்களிடம் ஒட்டியிருக்கும் வரட்டுக் கௌரவங்கள் - அக்கறையின்மை - சகலமும் தாமே என்னும் தப்பான தன்னம்பிக்கை. தம்முடைய திரைப்படத்தில் உள்ள குறைபாடுகளை ஒப்புக் கொள்ளும் மனப்பான்மை இல்லாமை - தம் சகாக்களிடம் உள்ள திறமைகளை மெச்சிடும் தன்மை இல்லாமை - தாம் விட்ட பிழைகளுக்கு பிறரைக் காரணம் காட்டி தப்பிக்கொள்ளும் அதிவிவேகம் .... இன்னபிற....

*கனடா திரைப்படத்துறையோ அல்லது ஈழத்து தமிழர் திரைப்படத்துறையோ வளர முடியாமைக்கு தென்னிந்திய திரைப்படத்துறையே காரணம் என்று குற்றம் சாட்டுகிறார்களே.. இது சரியா?*

எமது திரைப்படத்துறை வளர வேண்டும் என்பதற்காக, தென்னிந்தியர்கள் தமது திரைப்படத்துறையை வளராமல் வைத்திருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாமா! என்னங்க இது!

*கனேடியன் படம் வெளியாகுவதில் தாமதம் ஏன்?*

கனடாப் பிரமரிடம் கால்சீட் வாங்க லாம்.. ஆனால் கணபதி ரவீந்திரனிடம்! விழாக்களில் நாடகம்.. வைபவங்களில் நகைச்சுவை... கீதவாணி வானொலி அறிவிப்பு .. நட்புக்காக நிகழ்ச்சிக்கு செல்தல்.. தங்கத்தீபம் பத்திரிகை... ரெக்லியோன் வேலை.. மேடைகளில் பேச்சு.. சினிமாச் சங்கம் ... கதிரொளி சினிமா இதழ்.. இந்த ஆள் வாஷ் ரூமுக்கு போக எப்படி நேரங் கிடைக்கிறதோ தெரியலை!

## உருவலோ உருவல்!

*கனடாத் தமிழ்த் திரை உலகில் நகைச்சுவையில் ஜொலிக்கும் செந்தியும் சுரேஷ்ராஜாவும்'*



செந்தி: நம்ம ஐடியாக்களை ஒவ்வொருத்தரும் உருவுறாங்க. இனிமேல் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும். சுரேன்! நீங்க என்ன நினைக்கிறீங்க?

சுரேன்: உங்களுக்கு தெரியாதது என்னங்க இருக்கு. பேசாம... அவங்க ஐடியாக்களை நீங்க உருவிடுங்க.

செந்தி : அதுக்காகவே இப்போ புதுசா ஒரு ஐடியா வைச்சிருக்கிறேன்.!

சுரேன்: : அது என்ன ஐடியாவுங்க.

செந்தி: சொல்லுறதுக்கு முன்னரே.... ஐயையோ! யாரோ என்ரை புது ஐடியா வையும் உருவிட்டு போறாங்க. பிடீங்கடா! பிடீங்க!



**இசைத்தளபதி ராவீன் பற்றி அடுத்த இதழில் ..........**



# கனடா திரைப்பட கலைஞரே! சாட்டுக்கள் வேண்டாம்!

**விஜே குலதுங்கம்**
(பிரபல விஞ்ஞான ஆராய்ச்சி எழுத்தாளர், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர், சிந்தனையாளர்)

*(சினித்திரனின் ஆங்கில பகுதிக்காக எழுதிய கட்டுரை தமிழாக்கம் செய்யப் பட்டுள்ளது)*

ஹொலிவூட் திரைப்படங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி சில கட்டுரைகளைப் படித்தபோது, கண்டு கொண்ட சில சுவாரஸ்யமான விடயங்களை குறிப்பிடுகிறேன். அங்கே, திரைக்கதை தயாரானதும், அதில் உள்ள முக்கிய பாத்திரப் படைப்புகள் எதுவென்று அடையாளம் காண்கின்றனர். அவர்கள் அத்துடன் நின்றுவிடவில்லை. குறித்த அந்தக் கதாபாத்திரத்தின் சகல அம்சங்களையும் தரவுகளையும் தொகுத்துக்கொள்கின்றனர்.

உதாரணமாக அந்தப் பாத்திரத்தின் இயல்புகள்.... உருவப்பொருத்தம், அங்கங்களில் உள்ள இயல்பான தன்மைகள், மற்றைய கதாபாத்திரங்களுடன் உள்ள தொடர்பு... ஏராளம் சொல்லிக்கொண்டே போகலாம்.

குணநடை..... இவர் எதற்கும் கோபமடையும் சுபாவம் கொண்டவரா?.... அல்லது எதையும் லேசாக எடுத்துக்கொள்ளும் மனப்பான்மை உள்ளவரா?

தினசரி பழக்கவழக்கங்கள்.... எப்படி இவர் கைகால் முகம் கழுவுவார்... எப்படித் முகம் துடைப்பார்... இவர் நகம் கடிக்கும் பழக்கம் உள்ளவரா... இப்படியாக..

பொதுவாக ஒருவாரின் பழக்க வழக்கம், சுபாவ இயல்புகளை வைத்துக்கொண்டு அவரின் குணாதியத்தை அறிந்து கொள்ளலாம்.

இப்படியாக இந்தக் கதாபாத்திரத்தினை அக்குவேறு ஆணிவேறாக பிரித்தெடுத்த நூற்றுக் கணக்கான விடயங்கள்.

கதாபாத்திரத்துக்கு உரிய அனைத்து விடயங்களையும் கையில் வைத்துக்கொண்டு பொருத்தமான நடிகனையோ நடிகையையோ தேடுவார்கள்.

இந்த விடயத்தை கனடா தமிழ் திரைப்படத்துறையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

கனடாவில் திரைப்படம் எடுப்பதில் உள்ள சிரமங்களை உணர்ந்து கொள்ள முடிகிறது. அதற்காக, எதற்கெடுத்தாலும் இதை ஒரு சாட்டாக கூறலாமா?

ஒரு திரைப்படத் தயாரிப்பாளர்-இயக்குனரின் சொன்னதைக் கேட்ட போது நான் அதிர்ச்சியடைந்து விட்டேன்... அவரிடம் ஸ்கிரிப்ட் (திரைக்கதை வசனம்) கிடையாதாம். அவர் கதாபாத்திரக்குரிய நடிகர்களையும் தெரிவு செயவதில்லையாம். யார் அந்த நேரத்தில் கிடைக்கிறார்களோ அவர்களை வைத்துப் படம் எடுத்துவிடுவாராம். அந்த நேரத்திலே உடனே வசனம் எழுதி திரைப்படத்தில் வரும் உரையாடல் தயாராகிவிடுமாம். இந்த முட்டாள்தனத்தின் விளைவை நாம் படம் திரைக்கு வரும்போது அவதானிக்கலாம். உண்மையிலே இது திரைப்படமாக அமையாது. வெறும் சம்பவங்களின் தொகுப்பேதான். ஸ்கிரிப்ட் (திரைக்கதை வசனம்) மிக பிரதானமானது. அது தொலைக்காட்சி தயாரிப்பானாலும், நாடகமானாலும் திரைப்படமானாலும் ஸ்கிரிப்ட் அத்தியாவசியம். திக்கதைக்குரிய ஸ்கிரிப்ட் எழுதிய பின்னர் பட இயக்குனர் தனக்காக விரிவுபடுத்திய ஸ்கிரிப்ட் தயாரித்து கொள்ள வேண்டும்.

. இயக்குனருக்குரிய ஸ்கிரிப்ட் என்றால் அது வெறும் உரையாடல் மட்டும் அல்ல.... சம்பவங்களின் தொடர் பட்டியல் ... கமரா கோணங்கள், இடம், ஒளியளவு ... நடிக நடிகையர், உடையலங்காரம், இப்படிப் பலப்பல. இதையெல்லாம் தயார் செய்துவிட்டுத்தான் காட்சிகளை எடுக்க ஆரம்பிக்கவேண்டும். இவ்வாறாக ஸ்கிரிப்ட் எழுதி ஏற்பாடுகளை கவனித்தால் இடங்கள், நடிக நடிகையர், திரைப்பட தொழில்நுட்ப குழுவினர் போன்ற சகல விடயங்களையும் திரும்ப திரும்ப எடுக்கவேண்டிய வீண் செலவுகளையும் நேரங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

இன்னொரு குறைபாடு நடிகர் தெரிவு. கனடாத் தமிழ் திரைப் படங்களில் ஒரே முகங்களைத்தான் திரும்ப திரும்ப பார்க்கிறோம். பொருத்தமானவர்களை தேர்வதிலும் திடைப்பதை பயன்படுத்துவதையே இங்கு செய்கிறார்கள். இதன் காரணமாக, கொஞசங்கூட பொருத்தமில்லாத நடிகர்களை திரைப்படங்களில் காண்கிறோம். இதைவிட கவலைக்கிடமான விடயம் என்ன தெரியுமா! -

....... தயாரிப்பாளரும் இயக்குனரும் நடிகர்களாக தம் முகத்ததை திணிப்பதுதான்! சில தயாரிப்பாளர் இயக்குனர்கள் நல்ல நடிகர் என்பது உண்மைதான்... அனால் இது எப்போதுமே உண்மையானதாக எடுத்துக் கொள்ளமுடியுமா!

கனடாவில் உள்ள கலைஞர்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் விவேகமான அணுகு முறையாலும், கிடைக்கும் வளங்களை பயன்படுத்துவதாலும் நல்ல தயாரிப்புக்களை கொண்டுவரமுடியும் என்பதே என் கருத்து. வெறும் சாட்டுக்களைச் சொல்லி தப்பித்துக்கொள்ளும் தன்மையில் இருந்து மீள்வது அவசியம்.




# கனடாவில் சின்னத் திரை

கனடாவில் பொழுதுபோக்கு சாதனங்களில் தொலைக் காட்சி முன்னிடம் வகிக்கிறது. இதற்கு காரணமான பல நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. நிகழ்ச்சி 75வது வாரத்தினை அண்மித்து வருகின்றது.

கருத்தாழம் மிகுந்த விடயங்களை தன்னியல்பாகவே நகைச்சுவை கலந்து தரக்கூடிய ஆளுமை உள்ள ஒருவர் கே.எஸ்.பாலச்சந்திரன். இவர்தான் "அண்ணை ரைட்" பாலச் சந்திரன் என்று ஒருகாலத்தில் அழைக்கப்பட்டவர். தணியாத தாகம் 'சோமு' வாக ஒவ்வொரு குடும்பத்திலும் வானொலி மூலம் உறவா டியவர். தற்போது கனடாவில் Wonderful Y.T லிங்கம் show கதாநாயகனாக உலவுகின்றார். TVI தொலைக் காட்சிக்கே பெருமையைத் தேடித் தருபவராக விளங்கும் இவரின் இந்த நிகழ்ச்சி அமரிக்க கண்டங்களையும் கடந்து பிற கண்டங்களிலும் பலரும் நேசிக்கும் ஒரு கலைப் பொருளாகி விட்டது. சிரிப்பில் சிந்தனை ஊட்டி, அதில் தெளிவு தருவது என்பது அரும்பெரும் கலை. அதை நெளிவு சுழிவு இல்லாமல் ரசித்து ருசிக்கும் வகையில் இவர் வழங்கிவருகிறார். இன்று ரசிகர்கள் மத்தியில் முதன்மை யாக விரும்பப்படும் நிகழ்ச்சி இதுவென புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கனடாவில் வாழும் பல கலைஞர்கள் இவரது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, "பூவுடன் சேர்ந்த நாரும் வாசம் பெறும்" என்ற வகையில் நிகழ்ச்சியை மெருகேற்றி, அத்துடன் தாமும் மிளிர்கின்றனர். எதிர்வரும் தைப்பொங்கல் (14-1-2006) இந்த நிகழ்ச்சியின் 75வது தொடர் ஒளிபரப்பாகின்றது.

10 ஆண்டுகளுக்கு முன்னர் கீதவாணி ராஜ்குமார் அவர்களுடன் உரையாடும் போது, தனது விரும்பம் ஒன்றினை கூறினார். "ஆங்கில தொலைக்காட்சியில் எத்தனையோ "talkshow" நடக்கிறது. அதுபோன்று ஒரு தொடரினை செய்யவேண்டும் என்ற நோக்கம் எனக்கிருக்கிறது" என்று அன்று ராஜ்குமார் சொன்னார். அதை நிறைவேற்றும் சந்தர்ப்பம் அவருக்கு சரியாக பொருந்தி அமையவில்லை. அவ்வாறான பெரும் சந்தாப்பம் திரு.கே.எஸ்.பாலச்சந்திரனுக்கு கிடைத்திருக்கிறது. தமிழ் தொலைக்காட்சி வரலாற்றில் (இந்தியா உட்பட) இவ்வாறான 'கலையகை - உள்ளரங்க கலந்துரையாடல்' இதுவே முதலாவது என்று கூறப்படுகின்றது. இது கே.எஸ்.பாலச் சந்திரனுக்கு மட்டும் பெருமையல்ல.... TVI தொலைக் காட்சிக்கு மட்டும் பெருமையல்ல... ஒட்டுமொத்தமான கனடாத் தமிழர்களுக்கும் பெருமை நல்குவதே. எந்தவிதமான பக்கச் சார்பும் இல்லாமல் யார்யாருக்கு தகுதியிருக்கிறதோ, அவர்களை எல்லாம் தனது showவில் ஜொலிக்க வைத்திருக்கிறார் இவர். இவரின் பண்பு எவருக்கு வரும்!



அண்மையில் TVI நிகழ்த்திய கொண்டாட்டம் நிகழ்ச்சியில் Y.T.லிங்கம் show கதாநாயகன் கே.எஸ்.பாலச்சந்திரன் தன்னை சூழ்ந்துவிட்ட ரசிகர்கூட்டத்தில் திக்கு முக்காடிப் போனார். இவர் அனைத்துத் தரமான ரசிகர் மத்தியிலும் இப்போது பிரபல்யமாகி வருகிறார். இவருடைய நிகழ்ச்சி TVI ல் வந்ததும் கைகொட்டிச் சிரித்து ரசிக்கும் குழந்தை யொன்று கொண்டாட்டம் நிகழ்ச்சியில் இவரைக் கண்டதும் சிரித்து கைகாட்டிய சம்பவம் யாவரையும் நெகிழவைத்து.

# தொலைக்காட்சி ஊடகத்தில் சாதனையாளர் கே.எஸ்.பாலச்சந்திரன்



*அந்தநாள் .. ஞாபகம் .. நெஞ்சிலே வந்ததே.. நண்பனே இந்தநாள் அன்றுபோல் இல்லையே! ஏன்? ஏன்? நண்பனே!*

TVI கலைக்கூடத்தில் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்களுடன் கே.எஸ்.பாலச்சந்திரன்

Wonderful Y.T.லிங்கம் show தயாரிப்பு குழு



பக்கம் 2ல்
மாறுவேடத்தில் இருக்கும் நடிகர்கள்
மீசையுடன் ஸ்ரீமுருகன்
மத்தளத்துடன் அன்ரன் பீலிக்ஸ்

## யேம்ஸ்பொன்ட் பாணியில் கனடாவில் புதிய தமிழ் படம்

சுகம்சுகமே திரைப்படத்தில் ஜேம்ஸ்பொன்ட் பாணியிலான காட்சிகள் பலரின் பாராட்டை பெற்றன. இதனைத் தொடர்ந்து முழுமையாக துப்பறியும் திரைப்படம் ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் கதாசிரியர் அருணும் இயக்குனர் ரவி அச்சுதனும் ஈடுபட்டுள்ளனர்.






# கனடாவில் முத்திரை பதிக்கும் அபிநயங்களை வெளிப்படுத்தும் திரைப்படக்கலை







கனடாவில் வளர்ந்து வரும் நடனக்கலைகள் தற்போது திரைப்படங்களின் மூலம் மேலும் பிரபல்யம் அடைய ஆரம்பித்துள்ளன. திருமதி. நிரோதினி பரராஜசிங்கம் அவர்களின் தலைமையில் இயங்கும் பரதநாட்டிய ஆசிரியர் அமைப்பு தமது மாணவர்களை வைத்து "மெதுவாக உன்னைத் தொட்டு" படத்தில் தந்த நடனக் காட்சி பலராலும் புகழ்ந்து பேசப்படுகின்றது. நடனம் படமாக்கப்பட்ட ஆலயம், நடனமாடிய பெண்களின் அபிநயங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அருமையான காட்சியாக அமைந்திருந்தது. ஒரு சில நிமிடங்கள் என்றாலும், படத்துடன் ஒட்டாத காட்சி என்றாலும் ரசிகர்களின் மனத்தில் இந்தக்காட்சி நிலைத்திருக்கிற தென்றால் கனடாவில் உள்ள பரதநாட்டிய ஆசிரியர்கள் நிச்சயம் பாராட்டுக்குரியவர்களே.

இந்தப் படத்தில் அமைந்த காட்சிக்கு கிடைத்த வரவேற்பினைக் கண்ட தயாரிப்பாளர் ஒருவர் பரதம், இசையுடன் சம்பந்தப்பட்ட திரைப்படத்தை எடுக்க விரும்பியுள்ளார். இதற்கான கதை எழுதப்பட விருக்கின்றது. கனடாவில் பிரபல நடனஆசிரியர் ஒருவரின் மாணவி இதில் முக்கிய பாத்திரத்தில் நடிக்க விருப்பதாக பேசப்படுகின்றது. இதில் கதாநாயகனாக நடிக்கவிருப்பவர் அமரிக்காவில் படித்துக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் இளைஞர் என்றும் வதந்தி நிலவுகிறது. இந்த இளைஞர், படத்தயாரிப்பாளரின் நெருங்கிய உறவினர் என்றும் கூறப்படுகின்றது. 2006ம் ஆண்டு விடுமுறை காலத்தில் பட சூட்டிங் நிகழவிருப்பதாக அறியப்படுகின்றது.



## ஒளியருவி தந்த அதிசயம்

ரவி அச்சுதனின் ஒளியருவி DVD யை திருமதி வரதராஜா விடம் கொடுத்து அபிப்பிராயம் கேட்டோம்.

அதை முழுமையாகப் பார்த்த அவரது வீட்டில் உள்ளோர் அனைவரும் திகைத்துவிட்டனர். ஒளிப்பதிவு மட்டுமல்ல நடிப்பு, அழகு, மேக்கப் அனைத்திலும் நம்மவர்கள் இவ்வளவு உயர்ந்து விட்டனரா என்று அதிசயப் பட்டனர். உங்களுக்கு பிடித்த பாடல் காட்சி என்னவென்று கேட்டோம்.

ஒரு பாடல் காட்சியை காட்டி, இந்தப் பாடலுக்கு நடித்த அந்த இரண்டு பெண்களும் மிக அற்புதம் என்றனர்.

"அவர்கள் யாரென்று தெரியுமா?... உதயன் பத்திரிகை ஆசிரியரின் புதல்விகள்" என்றேன்.

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?" என்றார் அந்தக் குடும்பப் பெண்மணி.




பின் அட்டைப்படம்:

## ரிஷி

கனடா, ரொறன்ரோவை பிறப்பிடமாகக் கொண்ட ரிஷி என்னும் இளைஞர் தென்னிந்தியா சென்றபோது, அவரை இசையமைப்பாளர் தேவாவுடன் ஸ்ரூடியோவில் கண்ட பிரபல டைரக்டர் ஒருவர், தனது திரைப்படத்தில் கதாநாயகனாக நடிக்க அழைத்திருக்கிறார். இவரின் வயது போதியளவு இல்லாமையால் தனது அடுத்த படத்தில் நடிக்க வைக்கவிருக்கிறார். அந்த டைரக்ரரின் ஆலோசனைப்படி, சில பயிற்சிகளை மேற்கொள்வதுடன், திரைப்படக் கல்லூரியின் சில கற்கை நெறிகளை பயிலவுள்ளார் ரிஷி.

**National** Car and Truck Rental



65 Comstock Rd.
Scarborough, ON
M1L 2G8
(Warden & Eglinton)
**416-640-0497**

தமிழில் சேவைக்கு அழையுங்கள்



Car
Mini Van
Cargo Van
Call For Details

Call: Vic Seevaratnam

5000 Sheppard Ave
*(Markham & Sheppard)*
Inside Hogan Dealer
**416-291-5214**

128 Richmond St. East
(Richmond & Jarvis)
Down Town
**416-364-4558**

20 Continental Place
(Warden & Ellesmere)
Scarborough
**416-292-2919**

# மீண்டும் திரைக்கு வருகிறது




**National** Car and Truck Rental



*Call:*
*Vic Seevaratnam*

தமிழில் சேவைக்கு அழையுங்கள்

| 65 Comstock Rd. | 20 Continental Pl | 128 Richmond St. E | 5000 Sheppard Ave |
|---|---|---|---|
| (Warden & Eglinton) | (Warden & Ellesmere) | (Richmond & Jarvis) | (Markham & Sheppard) |
| 416-640-0497 | 416-292-2919 | 416-364-4558 | 416-291-5214 |

## *Experienced Car Sales Person Needed*

Call: Jorge DeSousa (416 291 5054 Fax: 416 291 4234
Vic Seevaratnam (416 882 5599)

HOGAN
Chevrolet Limited
*A Roy Foss Company*


Hero from Canada
Rishi
விபரம் பக்கம் 28